www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர்- 9



Chanchive udgave- 9




87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர்-9

## உள்ளடக்கம் — பக்கம்


1. நோக்கு. 3.
2. திருக்குறள் விளக்கவுரை. 5.
3. குழந்தையை வளர்த்துக் கொள்வதெப்படி. 6.
4. கவிதை (மனிதரில் எத்தனை நிறங்கள். 8.
5. சிறுவர் அரங்கம். 9.
6. விவேகமுள்ள கோபாலன் (சிறுகதை) 10.
7. குறுக்கெழுத்துப் போட்டி. 13.
8. பொதி சுமக்கும் இளங்கன்றுகள். 16.
9. கவிதை (ஏசீ ரா) 21.
10. சின்னத்தைப் பற்றி ஓர் இரகசியம். 22.
11. சிறுப்படங்கள் (சிரிக்கச் சிந்திக்க) 24.
12. கலைவிழா பற்றி சிலரது கருத்துக்கள் 29.
13. நிரந்தரமாகாத நாட்கள் இங்கே (கவிதை) 32.
14. மீராவின் தொடர் நவீனம். 36.
15. கவிதை (வாழ்த்துகிறோம் வளர்க சஞ்சீவி) 38.
16. கடிதங்கள். 39
17. பேட்டி. 41.
18. பற்களை எவ்வாறு பராமரிக்கிறீர்கள். 45.
19. ஒரு மாணவனின் அநுபவம். 47.
20. வெருகமரும். (சிறுகதை). 48.
21 தேதிக்கு கிழமை கண்டுபிடிக்க வழி? 54.
22. ஓவியம். 59.


**விலை**
**10 Kroner**

அட்டைப்பட விளக்கம்

**அரவணைப்பு**

LINOLIUM SNIT

HELLE 15 ÅR.

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு.
CHANCHIVE
POST BOX - 1205
7500 HOLSTEBRO.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோக்கு

அன்பான வாசகர்கட்கு!

இன்று டென்மார்க்கில் பல நகரங்களில் கூடுதலான தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இவர்கள் தங்கள் குழந்தைகளிடம் டெனிஸ் மொழி ஆற்றலையும், கல்வி, விளையாட்டுத் திறனையும் அவர்களுடைய புத்திசாலித்தனத்தையும் கண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டாலும் தங்கள் குழந்தைகள் தமிழ் மொழியில் பின்தங்கியுள்ளார்கள், அதனைக் கற்றுக் கொள்ள முடியவில்லை என்று எல்லாப் பெற்றோர்கள் மனதிலும் ஒரு பாதிப்பு இருந்து வருகின்றது.

வேறொரு ஐரோப்பிய நாடுகளிலும் இல்லாத வகையில் குழந்தைகள் தாய் மொழியினைக் கற்றுக் கொள்வதற்கு இங்கு சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகரிலும் ஒருவரையோ, சிலரையோ தெரிவு செய்து குழந்தைகளுக்கு தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ் ஆசிரியர்களும் தங்களுக்கு தெரிந்த வகையில் முடிந்தவரை குழந்தைகளுக்கு தமிழ் மொழியினை கற்பித்து வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய உழைப்பு குழந்தைகளுக்கு எந்த அளவிற்கு பயன்படப் போகின்றது என்பது கேள்விக் குறியாகவுள்ளது. ஆசிரியர்கள் இந்தியாவில் இருந்தோ, இலங்கையில் இருந்தோ தங்களுக்கு தெரிந்த புத்தகங்களை எடுப்பித்து, அதைக் கொண்டே பாடத்தினை கற்பித்து வருகின்றார்கள். இதனை டென்மார்க்கில் ஒரு பாடத்திட்ட அடிப்படையில் கொண்டு வந்து கற்பித்து வந்தால் பிள்ளைகளுக்கு மேலும் பயன்படக் கூடியதாகவிருக்கும். அத்துடன் ஆசிரியர்களுக்கும் கற்பிக்க இலகுவாகவிருக்கும். பிள்ளைகளின் ஆற்றலை தெரிந்து கொள்ளவும், அவர்களுக்கும் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தினை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஏது-

www.tamilarangam.net



வாகவிருக்கும்.

ஆரம்பத்தில் நாங்கள் பத்துப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் மொழியினை, இலக்கிய இலக்கணங்களை கற்றும் எங்களால் பூரணமாகவும், தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியவில்லை என்னும் போது, இங்கு வளர்ந்து வரும் குழந்தைகளின் நிலைமையினை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது. எதிர்காலத்தில் எங்கள் குழந்தைகள் எங்களை குறை கூறாமல் இருக்கவும், அவர்கள் கவலைப்படாமல் வாழ்வதும் எங்கள் அனைவரின் கைகளில்தான் தங்கியுள்ளது.

இதில் ஆர்வமுள்ள சகல பெற்றோர்களும், தமிழ் ஆசிரியர்களும், நல்லெண்ணம் கொண்டவர்களும் இதனை கவனத்தில் கொண்டு இந்த ஒரு பாடத்திட்ட அடிப்படையைச் செயலாக்க முன்வர வேண்டும் என்று சஞ்சீவி உங்களைக் கேட்டுக் கொள்கிறது. இந்த நல்லெண்ண முயற்சிக்கு முன்வரும் உங்களுக்கு சஞ்சீவி தன்னால் முடிந்த உதவியினை செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றது.

சஞ்சீவி

---

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்.
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

-பாரதி-

www.tamilarangam.net



# திருக்குறள் விளக்கவுரை

உரை - சாமி - சிதம்பரனார்.

பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்.


வாய்மை, குறள் இல:- 6.

பதவுரை:-

பொய்யாமை அன்ன - பொய் பேசாமையைப் போன்ற. புகழ் இல்லை - புகழ் வேறு ஒன்றும் இல்லை. எய்யாமை - வருந்தாமலே. எல்லா அறமும் - எல்லா அறங்களையும். தரும் - அது கொடுக்கும்.

கருத்துரை:-

பொய் சொல்லாதிருப்பது புகழ், அது எல்லா நன்மைகளையும் தரும்.



www.tamilarangam.net



# ஆளுமையை வளர்த்துக் கொள்வது எப்படி?

ஆளுமை என்றால் திறமை என்று பொருள்படும். எத்துறையிலும் திறமையை பெறுவது என்ற வினாவும் இங்கு எழத்தான் செய்கிறது. எல்லா விடயங்களிலும் தெளிவான தன்மையும், உறுதியான மனநிலையையும் படைத்தவனையே ஆளுமையுடையவன் என நாம் அழைக்கலாம்

ஆங்கிலத்தில் நாம் கூறும் போது இதனை Personality என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலப் பதத்தை உச்சரித்து ஒருவரை Personality உள்ளவர் என்று கூறும் போது வெறும் வெளித்தோற்றத்தை மட்டும் தான் நாம் கூறுகின்றோம் என்று பலர் எண்ணிவிடுகின்றனர். அது தவறான கருத்தாகும். எந்த சூழ்நிலையிலும் கலங்காமல் உறுதியான தீர்மானத்தை எடுத்து செயல்படுத்தும் ஒருவரையே இந்த ஆளுமையுள்ளவர் என்ற வரைவரைக்குள் நாம் வரையறுக்கமுடியும்.

எம்மை பெற்றோர்கள் வளர்த்த விதம் இன்றும் கூட எம்மை சுயமாக எந்த முடிவையும் எடுக்க முடியாத வகையில் ஆக்கியுள்ளன. ஒரு இளைஞன் வளர்ந்து தனது காரியங்களைச் சுயமாக செய்யும் ஆளுமை படைத்தவனாக மாற அவனுக்கு 25 வருடங்கள் செல்வதாக இந்திய பேராசிரியர் ஒருவர் அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார். இந்தத்தன்மை இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் பெருமளவு காணப்படுவதாக அவர் கோடிட்டு காட்டியுள்ளார். அவ்வாறாயின் ஒருவருக்கு குழந்தை பிறந்தால் மட்டும் தான் அவனை பயன் உள்ளவனாக வளர்க்கமுடியும் என்ற மறைமுகமான கருத்தும் இங்கு தொனித்து நிற்கிறது.

நாம் குழந்தையாக இருந்து வாலிபர்களாக வளர்ந்துவரும்

www.tamilarangam.net



அந்த ஒவ்வொரு பருவத்திலும் நாம் ஓரளவு சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படாமையே இந்த ஆளுமை குறைவிற்கு முக்கிய காரணம். தனது நண்பனுடன் கதைத்துவிட்டு சற்றுதாமதமாக வீட்டுக்கு வரும் பள்ளிச்சிறுவன் வீட்டில் பெற்றோரால் ஒரு கொலைக்குற்றவாளிபோல் நிறுத்தி விசாரிக்கப்படுகிறான். எமது சமூகத்தில் இதனால் அந்தச்சிறுவன் மனதில் தப்பாதே தனது நண்பனுடன் கதைப்பதை பெற்றோர் விரும்பவில்லை, என்ற தாழ்வுணர்ச்சி ஏற்பட்டு பெற்றோருக்கு தெரியாமல் நண்பனைச்சந்திக்கிறான். இந்த அற்ப விடயத்தில் அவனது சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. பின்பு ஓய்வான நேரங்களில் தொலைக்காட்சி அல்லது நாவல்கள் வாசித்தால் கூட, அதை வைத்துவிட்டு படி என்று கூறும், புரிந்துணர்வு அற்ற பெற்றோர். இங்கும் அவனுக்கு ஒரு சுதந்திரமற்ற தன்மையால் அவன் ஒதுங்கிப் போகிறான். வீட்டுக்கு வரும் விருந்தினர்கள், உறவினர்களுடன் சுதந்திரமாக உரையாடினால் கூட அவன் கண்டிக்கப்படுகிறான். மொத்தத்தில் நாளுக்கு நாள் அவன் சுயமாக எதனையும் தீர்மானிக்க, அதனை செயற்படுத்த அனுமதிக்காமல் அவனது உணர்ச்சிகளை மதிக்காமல், ஒரு வரையறைக்குள் அவன் இயங்க அனுமதிக்கப்படுகிறான்.

இப்படிப்பட்ட இளைஞர்கள் வெளி உலகில் தனித்து விடப்படும் பொழுது உண்மையில் தனிமைப்பட்டு போய்விடுகிறார்கள். இவர்களுக்கு புதிய சூழ்நிலையில், வாழ்க்கை முறை மாற்றங்களை பழகிக்கொள்ளவே பல காலம் தேவைப்படுகிறது. தனது கருத்து சரியானவையா? மற்றவர்கள் நம்மைக் கேலி செய்வார்களா? என்ற விடை காணாத வினாக்கள் அடிக்கடி மனதில் எழும். அவர்களுக்கென ஒரு பாதை இருக்காது. சமுதாயத்தின் பொதுப்பாதையே அவர்களது பாதையாகவும் இருக்கும். அவ்வாறாயின் இத்தகைய ஜென்மங்களின் இலட்சியம் தான் என்ன? மற்றவர்களுக்காக வாழ்ந்து, மற்றவர்களுக்காக மடிந்து விடுவது தானா?

இளைஞர்களே, புதிய உலகின் இளம் தலைவர்கள். நாங்கள். நாம் எம்மை எல்லா வழிகளிலும் ஆளுமை மிக்கவர்களா-

www.tamilarangam.net



-க்கி தளராத உறுதி கொண்டவர்களாய் எம்மை மாற்றி ஒரு புதிய உலகை அமைப்போம். ஆண்மட்டும் தான் குடும்பப் பொறுப்பை சுமக்கவேண்டும் என்று ஒரு எழுதப்படாத சட்-டமும் எமது சமுதாயத்தில் உள்ளது. பெண்களாலும் அதனை சுமக்கமுடியும் சந்தர்ப்பம் இன்னும் பூரணமாக தரப்படவில்லை என்றே எண்ணுகிறேன். எனவே ஒவ்வொரு பிரஜையும் சிறந்த ஆளுமையினை படிப்படியாக வளர்த்துக் கொண்டால் மகிழ்ச்சியான சமுதாயம் ஒன்று மலராமலா போய்விடும் எம்மண்ணில்?

நன்றி

சி. செல்வச்சந்திரன்
இலண்டன்


# மனிதரில் எத்தனை நிறங்கள்

எங்களின் கதை மிக உயர்ந்தவர் நிலை.
ஜாதிகள் பல கொண்டதே தளை.
உயர்ந்தவர் முன் தாழ்ந்தவர் நிலை.
சோகமே தனைக் கொண்டதே கதை.
கடவுள் படைத்த மனிதர்கள் பல.
படைத்தனர் பல ஜாதிகள் என.
உயர்ந்தவர் சிலர் வீழ்ந்திடும் போது.
தாழ்ந்தவர் அவர் உதவுவர் பலர்.
மனிதனே ஜாதியை மறந்திடு, நீயடா
நினைத்திடு ஆண், பெண் இரண்டுதான் உலகிலே.
புரிந்திட்டாய் மனிதன் நீ, இல்லையேல் மிருகம் நீ.

- விமல் -
HOBRO

www.tamilarangam.net






# உலக உதைப்பந்தாட்டம்

## போட்டி பற்றிய கேள்விகள்

1. இத்தாலியா 90' உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய நாடுகள் எத்தனை?

2. பங்குகொண்ட நாடுகளில் ஆசியாவில் இருந்தும், ஆபிரிக்காவில் இருந்தும் பங்கு பற்றிய நாடுகள் எவை?

3. 1982ம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது? எந்த நாட்டில் நடைபெற்றது?

4. 1990ம் உலகக்கிண்ணப் போட்டித் தெரிவின் இறுதியில் டென்மார்க்கைத் தோற்கடித்த நாடு எது?

5. டென்மார்க்கின் உதைப்பந்தாட்ட தற்போதைய பயிற்சியாளரும், முன்னைய பயிற்சியாளரும் யார்?

6. 1986ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் பங்குகொண்ட ஆபிரிக்க நாடுகள் எவை?

7. 1986ம் ஆண்டு நடைபெற்ற போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது? எத்தனை நாடுகள் பங்குபற்றியது?

(தொடர்ச்சி 58 ம் பக்கம் பார்க்கவும்.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விவேகசாலி கோபாலன்



கோபாலனுடைய ஆற்றல் சொல்லுந்தரமன்று. அவன் சிறு பிள்ளையாக இருந்த போதே அவனுடைய செயலும், பேச்சும் மற்றையோரை ஆச்சரியமடையவைக்கும் விவேகமுள்ள பிள்ளையாக வளர்ந்தான். கோபாலனுடைய விவேகத்தினால் அவ்வூரில் உயர்வடைந்தவர்கள் பலர், சென்ற இதழில் நீங்கள் பார்த்த அருள்மணியையும் இளைஞனைப் போல் இங்கே ஒரு ஆசிரியரே புதிய திருப்பமொன்றை அடைந்தார்.

கோபாலன் மூன்றாம் வகுப்பில் கல்விகற்கும் வேளையிலே, ஒரு நாள் ஆசிரியர் தயாளகுரு வகுப்பறைக்கு வந்து சமூகக் கல்விப் பாடத்தை தொடங்கி, நீதி, தண்டனை, குற்றம் என்பவைபற்றி எளியமுறையில் சிறுவர்கட்கு விளங்கும் வகையில் படிப்பித்துக் கொண்டிருந்தார்.

பாடத்தைத் தொடங்குமுன்னர் எப்போதும் போல ஆசிரியர், "பிள்ளைகளே பாடத்தைக் கவனமாகக் கேளுங்கள். உங்களுக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் உடனே கையை உயர்த்துங்கள். யாரும் குறுக்கே கதைக்கக் கூடாது. அப்படியாராவது கதைத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும்." என்று சொல்லியிருந்தார்.

நீதியைப் பற்றிய விளக்கங்களை முதலில் விளக்கிக் கொண்டிருந்தார். மனுநீதிச் சோழன் நீதி, சிபிச்சக்கரவர்த்தியின் நீதி, எல்லா-

www.tamilarangam.net



ளன் நீதி இப்படி ஆயிரத்து இருநூறு வருடங்கட்கு முன்னைய உதாரணங்களைக் கொண்டு படிப்பித்துக்கொண்டிருந்தார், காரணம்; தமிழனின் இன்றைய சரித்திரங்களிலும், அரசியலிலும் தூய நீதி இல்லைப்போலும்.

தண்டனையைப்பற்றிய விளக்கங்கள் அடுத்ததாக விளக்கினார் ஆசிரியர் தயாளரூபர். ஆசிரியர் இதற்காக சரித்திரங்களைப் புரட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சாதாரணமாக இன்று வீதிக்குவீதி, கம்பத்துக்கு கம்பம், கொட்டிலை, வீட்டிலை கொடுக்கப்படும் தண்டனைகளைப்பற்றி விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார்.

இந்த வேளையில் மாணவர்கள் பலர் கைகளை உயர்த்தினார்கள். ஆசிரியர் ஒவ்வொருத்தராக விசாரித்தார். ஒருமாணவன் "எங்கடை அண்ணை இரண்டு வருடமாய் மறியலில் இருக்கிறார் அது தண்டனையா?" அதற்கு ஆசிரியர், "இல்லை அது விசாரணை" இவற்று மாணவன் "அண்டைக்கு ஒருத்தனை எங்கடை றோட்டுக் கம்பத்திலை கட்டிச் சுட்டது தண்டனையா?" அதற்கு ஆசிரியர் "ஆம்" எனத்தலையாட்டினார். அப்போது கோபாலனுடைய முறை வந்தது. "வாத்தியாரே, யாருக்கு யார் தண்டனை கொடுப்பது?" எனக் கோபாலன் கேட்டான். ஆசிரியர் சொன்னார், பிள்ளைகளே கோபாலனுடைய இக்கேள்வி ஒரு அருமையான கேள்வி. இதற்குரிய பதிலை எல்லோரும் கவனமாகக் கேளுங்கோ.

ஒருநாட்டின் அரசியல், மதங்கள் தங்கள் நாட்டு சமுதாய அமைப்புக் கேற்றவாறு பல சட்டங்களையும், நீதிகளையும் இயற்றிவைத்திருக்கிறார்கள், அதன் படி மக்கள் வாழவேண்டுமென்பது சட்டம். அந்தச்சட்டங்களை மறுத்து நடப்பவர்கள் தண்டனை அடைகிறார்கள். தண்டனைகளைக் கொடுக்கும் உரிமை அரசினால் ஏற்படுத்தப்படும் அதிகாரிகளுக்கு உண்டு என்றார். அப்போ, தன்னைமறந்த நிலையில் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த கோபாலன், "அப்படியென்றால், சட்டங்களை நன்றாக அறிந்து, அதன்படி நடக்கும் ஒருவருக்குதான் தண்டனை கொடுக்கும் அதிகாரம் உண்டு. அப்படித்தானே?" என்று கேட்டான். உடனே

www.tamilarangam.net



எழுந்து அவனருகில்வந்த தயாளகுரு ஆசிரியர் "ஆம், ஆனால் நீ இப்-போ தண்டனை பெறப்போகிறாய், ஏன்தெரியுமா?..... கேள்வி கேட்பதற்கு கையை உயர்த்தும்படி நான் சொல்லியும், நீ கையுயர்த்தாமல் கேள்வி கேட்டது குற்றம். ம்.... கையை நீட்டு" என்று உத்தரவு போட்டு தன் கையில் இருந்த பிரம்பா-ல் அடிக்கப்போனார்.

ஓங்கிய பிரம்பை எட்டிப் பறித்த கோபாலன் அதைத் தான் தாறாக முறித்து எறிந்தான். கோபம் கொண்ட ஆசிரியர் ஏன் பிரம்பை முறித்தாய் என்று கேட்டார். அதற்கு கோபாலன். "ஆசிரியரே என்னை விட அறிவும், சக்தியும், திறமையும் உள்ள நீங்கள் எனக்குத் தண்டனை கொடுப்பது நியாயம். ஆனால் என்னைவிட சக்தியுமற்ற, உயிரேயற்ற ஒரு பிரம்பு எப்படி எனக்குத் தண்டனை கொடுப்பது? உங்கள் அறிவு எனக்கு தண்டனை கொடுக்கட்டும். அதை நான் மனப்பூர்வமாக ஏற்கிறேன் என்றான். இதைக் கேட்ட தயாளகுரு ஆசிரியர் அப்படியே அதிர்ந்து போனார். அப்படியே திரும்பத் தன் ஆசனத்தில் போய் அமர்ந்துகொண்ட அவர் சிந்திக்கத் தொடங்கினார்.

அன்றுமுதல் ஆசிரியர் தயாளகுரு பிரம்பே எடுப்பதில்லை. பிள்ளைகளை அன்பாலும், புத்திமதியாலும், அரவணைப்பாலும் படிப்பித்து மிகச்சிறந்த ஆசிரியர் என்ற பெயருடன் வாழ்ந்துவந்-தார்.

தண்டனை ஒருவனை நல்வழிப்படுத்தவே, அவனை அழிக்-கவல்ல.

(வாழும் கற்பனையே)

சுவேரியான்

---


சென்ற இதழில் வெளியான "விவேகமுள்ள கோபாலன்" என்ற சிறுகதையினை எழுதியவரின் பெயர் "சுவரியோன்" என்று தவறுதலாக குறிக்கப்பட்டு விட்டது. சரியான பெயர் "சுவேரியான்" ஆகும்.

ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# குறுக்கெழுத்துப் போட்டி: 8

வழங்குபவர்:
ஏம்சி. லோகநாதன்

சஞ்சீவியின் குறுக் கெழுத்துப் போட்டி இல:8 அனைவரையும் போட்டிக்கு அழைக்கின்றது.

போட்டிக்காக நீங்கள் செய்யவேண்டியது; குறுக்கெழுத்துக் கட்டங்களை பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான சரியான பதில்களை தெரிவுசெய்து கட்டங்களை நிரப்பவேண்டியதேயாகும்.

## கேள்விகள்:- மேல்- கீழ்

7-1 :— நில ஆதனப் பொருட்கள் சம்பந்தமான பிரிவினையை இப்படி அழைப்பர்.

7-9 :— ஒரு கவிதை இசையமைக்கப் பட்டு இசைக்கும் போது இப்படியும் பெயர் பெறும்.

14-16 :- இதுவே கணக்குகளில் பயன்படுத்தப்படும் பிரித்தற்குறியீடாகும்.

20-25 :- தமிழ் எழுத்துக்களின் வல்லினத் தொகுதி இங்கு குழம்பியுள்ளது.

30-33 :- (½) அரையடி நீளமுள்ள "கல்" கையளவுக்கு இப்படி அழைக்கப்படலாம். ஆனால் குழம்பியுள்ளது

35-39 : கோபங்கொண்டு விவாதித்தால் இது வரலாம். குழம்பியுள்ளது.

40-45 : எமதுதாய் நாட்டில் இங்கேயே இயற்கையான

www.tamilarangam.net



பெரிய துறைமுகம் இருக்கிறது?

51-45: புலாலுண்ணா மிருகங்கள் இக்கலை மூலம் தம்மை வளர்க்கின்றன. இது குழம்பியுள்ளது.

## கேள்விகள்

### இட - வலம்.

5-48: முற்காலத்தில் கட்டிட வேலைக்காகவும், வேறு தேவைகட்காகவும் சுண்ணாம்பு ஏற்றிவரும் கப்பலை இப்படியும் அழைத்தனர்.

6-32: மர, இரும்பு போன்ற பொருள்களில் இருந்து. அளவுத் திட்டங்களுக்கேற்ப வெட்டி, தேய்த்து பொருள்களைச் செய்வதை இப்படிக் கூறுவர்.

7-45: மாணவர்கள் இங்கு கல்விகற்பர்.

14-1: இவரையும் பிதாவையும் முன்னறி தெய்வம் என்பர்.

15-25: இது இரண்டு உ___யிர் மெய் எழுத்துக்கள்.

23-49: நவரத்தினங்களில் இதுவும் ஒன்று இது இங்கு குழம்பியுள்ளது.

24-3: வருமானங்களுக்கு அரசு விதிக்கும் வரியினை இப்படியும் கூறுவர்.

27-52: கணக்குகள், வேறு விடயங்களையும், இதைச் செய்வதால் மீண்டும் பரிசீலனை செய்ய ஆதாரமாகவுள்ளது ஆனால் குழம்பியுள்ளது.

38-51: ( — )

47-45: இதுவே சொற்களைப் பிரித்துக்காட்ட இடப்படும் குறியீடு.

50-37: கரும்பிலிருந்து சாறு எடுத்தபின் மிஞ்சுவது இதுவே.

## போட்டியின் விபரங்களும் நிபந்தனைகளும்.

1. சஞ்சிகையின் ஆசிரியர், செயற்குழு தவிர்ந்த யாவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்பவர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள கட்ட அஞ்சல் பத்திரத்தை பூர்த்தி செய்து 15/8 க்கு முன்னதாக சஞ்சிகைக்கு அனுப்பிவைக்கவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(முகவரி அஞ்சற்பத்திரத்தில் உள்ளது.)

3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக் கொள்ளப்படும்.

4. போட்டி முடிவுகள் சஞ்சிகையின் நடுவர் குழுவினரால் தெரிவதாம் மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.

5. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

6. சரியான விடையும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.


## குறுக்கெழுத்துப் போட்டி இல: 7ன் விடைகள்

**இட - வல**

3-29: புராதனம்.
4-23: சபலம்.
5-31: மாம்பலகை.
7-46: சித்திரை.
14-40: அசிங்கம்.
15-51: பனம் வைரம்.
19-6: சதம்.
32-47: விருத்தி.
42-50: சதி.
48-44: குதி.
43-36: முடை.

**மே - கீ**

7-2: சிம்மாசனம்.
7-11: சிதம்பரா.
20-14: பலசனத்தம்.
22-26: சிலம்பம்.
27-29: கம்பு.
33-31: திருநகை.
34-33: விதி.
37-38: (____)
40-46: அரசமுத்திரை.
48-46: குதிரை.



**பரிசிலுக்குரியவர்**

K. PADMANATHAN
CENTRUMGÅRDEN. 39
8870. LANGÅ.

இவருக்கு எமது பாராட்டுக்கள். பரிசிற் காசுக்கட்டளை உரிய காலத்தில் சஞ்சிகையால் அனுப்பிவைக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பொதி சுமக்கும் இளங் கன்றுகள்

(சிறுகதை)

மீரா

"எங்களுக்கு ஏன் என்றே விளங்கவில்லை." அவர்கள் துருவினார்கள். "எனக்கும் புரியவில்லை என்று ஒரு பொய் கூறினேன்.

* * * * * *

ரவி குடும்பம் அன்று மாலை "கொய்கபிலு" வந்து இறங்கினார்கள். ரவி - மனைவி சுதா - குழந்தை சுகந்தி; ஜீலண்டிலிருந்து விருப்பத்தின் பெயரில் எனக் கேட்டு சீலண்ட் வந்த போது எதேட்சையாக "கொய்கபிலு" கிடைத்தது. ரவியின் வீட்டுக்கு அண்மையில் ஏற்கனவே வந்த இரண்டு குடும்பங்களும் இருந்தன.

ரவி குடும்பத்தின் திடீர் வரவு அவ்விரு குடும்பத்தினரின் அன்றைய மாலைச் சந்திப்பின் ஆசிரியர் தலையங்கமானது. "ஜீலண்டிலே கனசனம்; பிரச்சினைப்பட்டு வந்தினமோ?" "தாயும் குழந்தையும் வடிவா, கழுத்திலை போட்டிருக்கிறதைப் பார்த்தால் நல்ல பசையான இடம் போலை இருக்கு." "அப்ப நீங்க கதைச்சனீங்களோ" "சீ... ஆட்க்கள் என்ன மாதிரி என்று தெரியேல்லை; எப்படிக் கதைக்கிறது. சிமோன் இறக்கேக்கே தான் நான் பிள்ளையை (B)போனகேவாலை கூட்டி வந்தனான்." "அந்தக் குடும்பத்தின்ர பிள்ளையும் (B) போனகேவா போலை தான் கிடக்குது" "பிள்ளையள் அழப்படாமல் இருந்தால் சரிதான். ஏதோ வந்தனாங்கள் இஞ்சை இருக்கிற காலம் மட்டும்

www.tamilarangam.net



மரியாதையாய் விளங்கினால் போதும்."

வளர்ந்து கொண்டு சென்ற பேச்சை ஒலியில் மூழ்கிய கோழியின் மணம் குறுக்கிட்டு, சாப்பாட்டு மேசைக்குச் கூட்டிச் சென்றது. பின் பேச்சும் திசைமாறியது.

ரவி குடும்பத்திற்கும் கொய்கயிறு மிகவும் பிடித்திருந்தது. போக்குவரத்து வசதிகள், கடைகள்; பாங்; போஸ்ற் ஒவ்வீஸ்; போனகேவாங்கள் அவன் வீட்டிற்கு அண்மையில் அமைந்திருந்த விதம்; மேலாக இயற்கையழகு நிரம்பிய கடற்கரை. இத்துடன் வந்த ஓர் கிழமையுள்ளேயே பஸ் ஸ்ராண்டில் நிற்கும் போது "இலங்கைத் தமிழ் நாம்" என்னும் பொதுமைப்பாட்டில் ஒரு புன்சிரிப்பில் தொடங்கி "தமிழங் கோ" என்று அத்திவாரம் போட்டு "வாங்கோவன் வீட்டுப்பக்கம்" எனக் கிட்ட நெருங்கி "அப்ப அடுத்த கிழமை நீங்கள் சாப்பாட்டுக்கு வாங்கோ!" என குடும்ப உறவுகளும் வலுப்பெற்றது.

"அப்ப உங்கடை கல்யாணம் எப்படி நடந்தது" "போன சமருக்கே எங்கே போனீர்கள்" என்ற ஆழம் பார்க்கும் கேள்விகள் இரண்டு ஒன்றை ரவி சந்தித்தாலும், மற்றப்படி மூன்று குடும்பங்களும் அடிக்கடி சந்திப்பது, காட்ஸ் விளையாடுவது குழந்தை சுகந்தியும் நிலாவும் கட்டிப் பிரள்வது, ஒன்றாக இருந்து தமிழ்ப் படங்கள் பார்ப்பது..... இப்படி பல விடயத்தில் ரவிக்கு அந்த வாழ்க்கை பிடித்திருந்தது.

குடும்பங்கள் நெருங்கி வந்ததை விட குழந்தைகள் சுகந்தி நிலா வின் பிணைப்புத் தான் மேலோங்கி நின்றது. சமுதாயத்தின் எந்தக் காலராக்களும் அதுகளைத் தொத்தாததே அவற்றின் சந்தோசங்கள்; எந்த வேலியும் கதியால்களும் இல்லாததே அவற்றின் சுதந்திரங்கள்.

இரண்டு குழந்தைகளும் அப்பிரதேசத்து போனகேவுனுக்கே வந்ததைத் தொடர்ந்து குமரன் கிழமைக்கு இருபது மணித்தியால ஒப்பந்தத்தின் கீழ் உதவியாளனாக அங்கு வேலைக்குச் சேர்ந்தான்.

ஜேர்மன் வழி டென்மார்க்; கல்யாணத்திற்கு காத்திருக்கும் இரண்டு பெண் சகோதரர்கள்; மனதில் நிறைந்த ஓர் கௌரி; ராட்சாத சராசரி யாழ்ப்பாண இளைஞர்களை பிளாக் மெயில் பண்ணும் உறவுகள் தான் அவனுக்கும்; ஆனால் கொஞ்சம் எண்ணிக்கைகளில்

www.tamilarangam.net



என்ன இறுக்கத்திலும் இருந்தாலும் குழந்தைகள் சுகந்தி, நிலாவின் மழலைகளில் அவன் வேலை நேரம் முடிந்துவிடும். அவற்றின் குறும்புகளில் அவனின் கவலைகள் எல்லாம் கலைந்து விடும். குழந்தைகளில் அவன் கொண்ட இறுக்கம், அவற்றின் குடும்ப அங்கத்தினரையும் நண்பர்கள் ஆக்கியது. வேலை நேரம் முடிய...... சில வேளை பின்னேரங்களில் அன்றி விடுமுறைநாட்களில் நல்ல விசேடமான காப்புக்கைச் சமயல்களில் அவனுக்கும் பங்கு கிடைக்கத் தொடங்கியது. கூடவே குழந்தையில்லாத அந்த மூன்றாவது குடும்பத்தினரும் கூட குமரனுக்குப் பரிட்சையமானார்கள். அந்தப் பரிட்சையம் குமரனோடு சில வேளை கூடிவரும் அவன் நண்பர்களுக்கும் ஏற்பட்டு ஓர் பத்துப் பேருக்குக் கிட்ட ஓர் மரத்தின் கிளையாக அச் சுற்று வட்டாரத்தின் உறவுகள் பெருகியது. அத்தனை கிளையாகத் தாங்கி நின்ற தாய் மரத்தின் மூலவேர் சுகந்தி நிலாவின் பிணைப்புத் தான்.

சுகந்தியும் நிலாவும் இரட்டைப் பிள்ளைகளோ என்று எண்ணும் வகையில் சில வேளை அவர்கள் உடுப்புக்கள் கூட அமைவதுண்டு. ஒன்றாக யோசித்து..... ஒன்றாக வேண்டி..... ஒரே மாதிரியான அன்பளிப்புக்கள் கிடைத்தது...... கண்பட்டு விடக்கூடாது என்பது குமரனின் பிரார்த்தனை. இதர குழந்தை பராமரிப்பவர்கள், இக்குழந்தைகளின் உடுப்புக்களைப் பாராட்டும் விதமும் அதனுடன் ஒட்டி வரும் ஓர் பொறாமை உணர்வும் பார்வையின் தெளிவு சுழிவுகளை கொண்டு குமரன் கவனிக்கத் தவறுவதில்லை. மனம் சற்று சங்கடப்பட்டாலும் அதிலும் ஓர் கௌரவம் இருப்பதாக அவன் நினைத்துக்கொள்வான்.

நாளாக ஆக நிலா, சுகந்தியின் நெருக்கத்தில் இறுக்கங்கள் கூடிவந்த போதிலும் மூன்று குடும்பத்திற்குமிடையில் ஏதோ ஓர் மூட்டம் வந்து போவது போல அவனுக்குப்பட்டது. அது ஏன் என்று அவனுக்குத் தெரியவில்லை. நன்கு கதைக்கின்றார்கள் சாப்பிடுகின்றார்கள் ஆனாலும் இடைக்கிடை ஓர் மூட்டம்; இடியில்லாத மூட்டம்; மழையில்லாத மூட்டம்; காற்றில் கலைந்து பழையபடி வானம் தெளிவாகும் மூட்டம்.

அந்த மூட்டத்தை யார் எங்கே கண்டார்களோ தெரியவில்லை; குமரன் மட்டும் சுகந்தி நிலாவின் கண்களில் காண்பான். ஓர் கணம் தான் தெரியும்.

www.tamilarangam.net



பின் மறைந்து விடும். மனோ தத்துவம் படித்தது அவ்வேளைக்கு வந்தால் தன் கண்ணாடியூடு மற்றவர்களைப் பார்க்கின்றனரோ என நினைப்பான். அது இல்லை யென அவர்களாகவே காட்டி நிற்பார்கள். எந்த நிலையில் எவன் துவக்குடன் குறிபார்க்கின்றான் என்ற அச்சத்துடன் சைக்கிளில் போகும் போது இருக்கும் படபடப்பு குமரனுக்கு சில நாட்களாகவே அவனுக்குள் இருந்தது.

அவசரகால லீவு வர குமரன் ஜேர்மனிக்குப் போய்விட்டான். ஆறு நாள் லீவு என்றால் நாலு நாட்களுக்கு மேல் இருப்புக் கொள்ளவில்லை. "மாமா வாங்கோ" என்ற சுகந்தி நிலாவின் அழைப்புக்கள்; படுக்கையில்; சுப்பர் மார்க்கற்றுக்களில்; ஏன் பாத்ரூமில்; தொடர்ந்தும் ஜேர்மனியில் இருக்கப்பிடியாமல் நாலாம் நாளே டென்மார்க் திரும்பி விட்டான். ஸ்டேசனில் நண்பன் கார் கொண்டு வந்திருந்தான். "நேராய்க் குழந்தைகளைப் போய்ப் பார்ப்போம்" "வேண்டாம்" "ஏன்" "வீட்டை போய் சொல்லுறேன்" குமரன் எதிர்பார்த்தது நடந்திருக்க வேண்டும்.

நண்பன் கூறியது எல்லாம் ஏதோ கனவில் காரணமின்றி நடந்து கொண்டிருப்பது போலப் பட்டது.

"ஏதோ தமிழ்படம் இரவலாக எடுத்ததாம்; ஒரு ஆள் பார்க்கவில்லையாம்; திருப்பிக் கொடுத்ததாம் பிறகு காசு கேட்டதாம்"

"சும்மா நிற்பாட்டடா" குமரன் கத்தினான். இரண்டு நாளை கஷ்ரப்பட்டு ஓட்டி விட்டு திங்கள் வேதனையுடன் பொன்கேவாக்கு வந்திருந்தான்.

"குமரன் கேட்டடயளோ இவன் இனிமேல் அந்த வங்களின்ரை பிள்ளையோடை கதைக்கப் படாது.

---

பொய், எல்லோரும் இரசிப்பது. உண்மை
சொன்னவன் மட்டும் இரசிப்பது.

நடிகர்-நாகேஸ்.

www.tamilarangam.net



விளையாடப்படாது. அறிஞ்சனோ இவனின்ரை கால் உடையும். பள்-
-ளிக் கூடத்திலை சொல்லி வையுங்கோ. ஒரு ஆக்கள் என்று படிகினன், இவனையப் பற்றி அறிஞ்சு போட்டு ..........." வார்த்தையை முடிக்காமலே சயிக்கிளில் ஏறிப் போனாள் அவன் எதிர்பார்த்தது மாதிரியே அடுத்தது,

"யூ சீ குமரன் ஐ டோண்ட் லைக் திஸ் நொன்சென்ஸ்...... ஒரு டீசன்ரான சனம் என்றுதான் நினைத்து இருந்தனான், ஒகே! இற் ஸ் தெயர் புறொப்பிளம், பட் இனிமேல் இவன் அந்த வீட்டுப்பிள்ளையோடு விளையாடக் கூடாது. இவாக்கும் சொல்லி வைத்திருக்கின்றேன். பிறகு மம்மியைப் பற்றித் தெரியும் தானே" கோபம் பட்டெனக் கிடையில் தாவ அது உருக்கொண்டு விரிய வெடுவெடுவென நடந்து போனாள் தாய்.

குழந்தைகள் இரண்டும் முழிச்சுக் கொண்டு நின்றன. குமரனால் அங்கு நிலாவையும் சுகந்தியையும் கா-
-ணமுடியவில்லை. நான் பூட்டப்பட்டு பின்னால் நன்கு இழுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு இளங்கன்றுகளைத் தான் கண்டான். இரண்டு குழந்தைகளையும் தன் இரு கரைகளில் இருத்தி வைத்து-
-க்கொண்டு மற்ற வேலையாட்கள் வரும் வரை காத்திருந்தான்.

அவர்கள் வந்தார்கள்; குமரன் குழந்தைகளின் பெற்றோர்கள் கூறியதை மட்டும் கூறினான் அவர்கள் அமைதியுடன் கேட்டார்கள்; காப்பி குடித்தார்கள்; கலந்துரையா-
-டினார்கள்; இடையில் பாண் சாப்பிட்டார்கள். குழந்தைகளை வெவ்-
-வேறு பிரிவுகளுக்குள் விடுவது எனத் தீர்மானித்தார்கள். பின்பும் காப்பி குடித்தார்கள்; அன்றைய வேலை ஆரம்பமானது. குமரன் மட்டும் எதிலுமே ஒட்டாதது போல இயங்கினான். இரண்டு பிரிவிலும் சிறிது சிறிது நேரம் வேலை பார்த்தான்.

நேரம் நத்தையாக ஊர்ந்தது. நிலாவும் சுகந்தியும் இரண்டு ஊமையாகத் திரிவதைப் பார்க்கக் குமரனுக்கு குடலை வலித்தது. அக்குழந்தைகளின் கண்களில்த் தெரிந்த அச்சம், பயம், மிரளல்; வெருட்சி, சுமந்து பெற்றவர்களு-
-க்கு சும்மா வழியில் வந்த எனக்கு ஏன் என அவனால் அவனினில் நின்றும் ஒதுங்க முடியவில்லை.

கௌரவச் சாயங்களில் குழந்தைகள் கறைபட்டுப் போவதை என்ன என்ன அவனுக்குத் தலை சுற்-

-றியது. கதிரையில் இருந்தவனை அவனையுமறியாது ஓர் அழுத்தம் அழுத்தி ஓர் குட்டித் தூக்கத்திற்கு இழுத்துச் செல்வது போலிருந்தது. ஓர் பதினைந்து நிமிடம் கழிந்திருக்கும் "ஐயோ குழந்தைகளைக் கொல்லாதையுங்கோ" எனப் பெலத்துக் கூறியபடி கதிரையிலிருந்து விழுந்தான்.

எல்லோரும் திடுக்கிட்டார்கள்; குழந்தைகள் வெருண்டு போயின; வேலையாட்கள் ஓடி வந்து அவனைத் தூக்கினார்கள். நிலா, சுகந்தி காலையின் மிரட்சியுடன் வந்து தமக்குள் தாம் எட்ட நின்று பார்த்தார்கள்.

"வ' ஸ்கிற்ற குமரன்"

"டெ வெட்' யாய் எக்க"

* * * * *

அடுத்த நாளிலிருந்து குமரன் வேலைக்குச் செல்லவில்லை.

முற்றும்.

[யாவும் கற்பனையே]

# ஏனோ?

சூரிய காதலன்

வரவைக் கண்டதும்

இருள் என்னும்

தன்னாடையினை

பூமிப் பெண்

அகற்றுவது ஏனோ?

- அலைன் அலோசியஸ் -
(HERNING)

www.tamilarangam.net



# கிண்ணத்தைப் பற்றி ஓர் இரகசியம்



1970 ஆம் ஆண்டு மூன்றாவது முறை சாம்பியனானதன் மூலம் ஜூலிஸ் ரிமெட் கிண்ணம் பிரேசில் நாட்டுக்குச் சொந்தமானது. இதன் காரணமாக 1974 ஆம் ஆண்டு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் புதிய கிண்ணம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மேற்படி கிண்ணத்தை வடிவமைப்பதற்கு ஏழு நாடுகளிலிருந்து 53 வடிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் தற்போதைய கிண்ணத்தை வடிவமைத்த பெருமை இத்தாலியைச் சேர்ந்த 'ஸில்வியோ கஸா நிக்கா'வுக்கு உரியது. மிலான் நகரில் அமைந்துள்ள "பேர்ட்டோனி" நிறுவனத்தில் இவர் சிற்பியாகக் கடமையாற்றினார்.

அக் கிண்ணத்தின் வடிவமைப்பைப் பற்றி அவர் விபரித்ததாவது.

கிண்ண உருவத்தின் தளத்திலிருந்து மேல் வாரியாக எழுந்து செல்லும் கோடுகள் கிண்ணத்தைச் சுற்றி வளை கோடுகளாகச் சென்று பூகோளத்தை ஏந்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இரு வீரர்கள் வெற்றிக் களிப்பை பிரதிபலிப்பதாகவும் உருவங்கள் அக் கிண்ணத்தில் செதுக்கப்பட்டுள்ளது என்று அழகாக, தெளிவாக தருக்-

கமாக கூடியிருந்தனர்.

18 கரட் தனித் தங்கத்திலான இக்கிண்ணத்தின் எடை 4,970 கிராம்களாகும். கிண்ணத்தின் தளத்தில் இரண்டு பச்சை வர்ண வளையங்கள் பதிக்கப்பட்டுள்ளன. 36 செ.மீ உயரமான இக்கிண்ணம் எந்த ஒரு நாட்டாலும் சொந்தம் கொண்டாடக் கூடியதல்ல. மாறாக, சர்வதேச உதைப் பந்தாட்ட சம்மேளன தலைமையகத்திலேயே இக்கிண்ணம் வைக்கப்பட்டிருக்கும். சாம்பியனாகும் நாட்டுக்கு தங்கத்திலான, தங்க முலாம் பூசப்பட்ட மாற்றுக்கிண்ணமே வழங்கப்படும்.

இக் கிண்ணத்தின் தளத்தில் வெற்றி பெறும் நாடுகளின் பெயர்கள் பொறிக்கக் கூடியதாக இடவசதி அமைக்கப்பட்டிருப்பதால் 1974 முதல் 2038 வரை 17 நாடுகளின் பெயர்கள் பொறிக்கப்படும். - நன்றி வீரகேசரி -

**நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் சாம்பியனான நாடுகளின் கப்டன்களும் அவர்கள் விளையாடிய ஸ்தானங்களும்.**

| | |
|---|---|
| 1930 | நசாஸி (உருகுவே) பின்வரிசை |
| 1934 | கோம்பி (இத்தாலி) கோல் காப்பாளர் |
| 1938 | மியேஸ்ஸா (இத்தாலி) வலது முன்வரிசை |
| 1950 | வரேலா (உருகுவே) பின்வரிசை. |
| 1954 | வோல்டர் (மே.ஜெ.) முன்வரிசை |
| 1958 | பெல்லினி (பிரேஸில்) பின்வரிசை |
| 1962 | கில்மார் (பிரேஸில்) கோல் காப்பாளர். |
| 1966 | பொபி மோர் (இங்கிலாந்து) பி. வரிசை |
| 1970 | அல்பர்ட்டோ (பிரேஸில்) பி.வரிசை |
| 1974 | ஃப்ரான்ஸ் பெக்கன் போவர் (மே-ஜெ) - பின்வரிசை |
| 1978 | பஸரெல்லா (ஆர்ஜன்டீனா) - பின் வரிசை |
| 1982 | டீனோ ஸொவ் (இத்தாலி) கோல் காப்பாளர் |
| 1986 | டியகோ மரடோனா (ஆர்ஜன்டீனா) முன் வரிசை |

www.tamilarangam.net



# நிழற்படங்கள் சிரிக்கச் சிந்திக்க

"டேய் உனக்கு எத்தனை தரம் ரெலிபோன் எடுத்தேன், வாரன் வாரன் என்டு சொன்னாய்... எப்போடா! வரப்போறாய்.... இனிமேல் நீ வராவிட்டால் உனக்கு ரெலிபோனும் இல்லை, உன்ரை சிநேகிதமும் இல்லை." எனக் கோபத்தோடு ரெலிபோனை அழந்து வைத்தான் ஜெனிபேட்.

உண்மையிலே அவன் கோவிப்பதற்கு நியாயம் உண்டு. அவனுடைய எல்லாவிதமான இன்பதுன்பங்களிலும் பங்கு கொள்ளும் நான் இம்முறை அவனது தாய் இங்கு வந்ததற்கு இன்னும் அவனிடம் போகாமல் இருப்பதே அவனது கோபம்.

எப்படியாவது இந்த வெள்ளிக்கிழமை அவனிடம் போயாக வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டு வெள்ளி இரவே யாமிறங்கினேன்.

"ஏதோ நல்ல காலம் வந்திட்டாய்..... வராவிட்டால் எல்லாம் தெரிந்திருக்கும்" என்றபடியே ஜெனிபேட் என்னை வரவேற்றான். குழந்தைகள் இரண்டும் வந்து என்னோடு ஒட்டிக்கொண்டன. மூலையிலிருந்த ஒரு கதிரையில் புன்னகைத்த படியே இருந்தா அவனது தாய். "எப்படியம்மா" என்றபடியே அருகில் போய் அமர்ந்து கொண்டேன். "இவரோ தம்பி நீ சொன்ன ஆள்" என்று ஜெனிபேட்டைக் கேட்டார். ஆம் எனத் தலையசைத்தான். "வந்தநாள் தொடக்கம் உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான் தம்பி நான் வந்து இவ்வளவு நாளும் வரவில்லை இனிமேல் இவன் இந்தப் பக்கம் வரட்டும் எண்டு கோபமாய் இருந்தவன் ஏதோ இப்ப ஒன்றும் பேசாமல் இருக்கின்றான்"

"இல்லையம்மா, வேலை, விளையாட்டுக்கள்... தெரியாதே.... என முடிப்பதற்குள் "டேய் என்னடா.. கண்டறியாத கதை கதைக்கிறாய்.... ஒரு கிழமை ஞாயிறு கூடக் கிடைக்காமல் போட்டுதோ ...என்ன ஆ.. எனச் சீறி விழுந்தான் ஜெனிபேட். "டேய் கொஞ்சம் சும்மாயிடுடா. என்று சிரித்துக் கொண்டே அவனைச் சமாளித்தேன். நீ சிரிச்சுச் சிரிச்சு எல்லோரையும் பேக்காட்டிப் போடுவாய்.... நீயும் உன்ரை சிரிப்பும், எனச் சிரித்துக் கொண்டே மனைவிக்கு உதவி செய்யக் குசினியுக்குள் நுழைந்தான்.

சாப்பிட வாங்கோ என ஜெனிபேட்டின் மனைவி எம் எல்லோரையும் அழைத்ததன் படி சாப்பாட்டு மேசையில் ஒன்று

www.tamilarangam.net



கூடிறோம்.

சாப்பாடு எல்லாம் முடிவடைந்து சோபாவில்ப் போய் அமர்ந்து கொண்டோம்.

"அம்மா எப்படி டென்மார்க் பிடிச்சிருக்கோ" என்றபடியே பேச்சைத் தொடங்கினேன். "என்ன... பிடிக்கத் தானே வேணும் உங்கள் எல்லோருக்கும் பிடித்திருக்குந் தானே....? இவன் தம்பிக்கும் பிடிச்சிருக்குந் தானே.... என்ன செய்யுறது அங்கேயும் நிம்மதியும் இல்லை நித்திரையும் இல்லை. இங்கே வந்து இவனையும் குடும்பத்தையும் பார்த்ததிலே எவ்வளவோ சந்தோசம். கடைசிக் காலத்திலே கூட இதுகள் ஒன்றையும் பாராமலையே கண்ணை மூடிடுவேணோ என்று பயந்தனான் ஏதோ ஆண்டவர் இதுகளிட்டை கொண்டு வந்து விட்டிட்டார். ஏதோ மற்றத்தாய் மாரைப் போல நிறையக் குழந்தை குட்டிகள் என்றாலும் கஸ்ரம் தான் இவன் இங்கே, மற்றவன் அமெரிக்காவிலே. ஏதோ வீட்டையும் வளவையும் விட்டிட்டு வரேக்கே தான் கவலை. ஏதோ ஒரு மாதிரி வந்து சேர்ந்திட்டேன்." எனத் தொடர்ந்தார், அம்மா.

"அப்ப... அம்மா இங்கே வாழலாம் என்று நினைக்கிறியளோ....? என்று சிரித்துக் கொண்டு கேட்டேன். "தம்பி எங்கடை நாட்டுப் பிரச்சினைகள் முடிஞ்சா பிறகேன் இங்கே உடனே போறது தானே. என்னதான் இருந்தாலும் எங்கடை சொந்த மண்ணிலே சீவிக்கிறது போல வருமோ. அந்தச் சாப்பாடுகள் - அந்தக் கிணற்றுத் தண்ணி என்ன? எங்கடை ஊர்த் தென்னைகள் பனைகள் வயல்கள், வெளிகள் கோவில்கள் குளங்கள்.... என்றபடியே குவிக்கல் விக்கினாகள்களும் கலங்கிவிட்டது. உண்மையிலே எங்கடை சனம் என்ன பாடு செய்துதுகளோ... அங்கேயும் நிம்மதியில்லை, இங்கேயும் நிம்மதியில்லை. என்றபடியே மீண்டும் கலங்கிக் கொண்டார்.

எனக்கு கதைக்கிறதோ விடுறதோ என்று சங்கடமாகிவிட்டது. "தம்பி என்னாலே இங்கே இருக்க முடியாது... கொஞ்ச நாளிலே போடுவன்." "அம்மா இங்கேயும் தமிழாக்கள் நிறைய இருக்கினம் அதுவும் சரியா ஊரைப் போலவும் வாழினம். நீங்களும் இருந்தால் ஒருமாதிரிச் சமாளித்து வாழலாம் என்றும் நினைக்கின்றேன்" என்றேன்.

தம்பி எனக்கு இங்குவாழுகின்ற தமிழாக்களுடை வாழ்க்கைமுறை கொஞ்சமும் விளங்கேல்லை. உதுகளைச் சொன்னாலும் கோபம் வரும். நான் எத்தனை தரம் நினைச்சுப் பார்த்தேன் இன்று வரையும் விளங்கவேயில்லை, எனப் புதிர்

www.tamilarangam.net



ஒன்றைத் தூக்கிப் போட்டார். அம்மா என்னத்தைச் சொல்லுறியள்... என ஆவலோடு கேட்டான் ஜெனியேட். "ஏன் தம்பி எனக்குத் தேவையில்லாத வேலை" என்றாள் அம்மா. எனக்கோ பெரிய ஆவலாக இருந்தது. ஏதோ என்னுடைய தூண்டிலிலே பெரிய ஒரு மீன் அகப்பட்டுக் கொண்ட உணர்வு. அம்மாவிடம் எப்படியும் இதை அறிந்துவிட வேண்டும் என்று ஆவலோடு "அம்மா சும்மா சொல்லுங்கோ" என்று நானும் கேட்டேன்.

"என்ர நினைப்பை உங்களுக்குச் சொன்னால்தான் என்ன" எனச் சொல்லத் தொடங்கினார். ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்லுறேன். நான் இங்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது. இவன் தம்பியின்ர சிநேகிதர்கள் என்டு கொஞ்சக் குடும்பக்காரர்கள் என்னையும் தங்கடை வீட்டுக்குக் கூப்பிட்டவை. போனவுடனேயே ஏதோ ஒரு தமிழ் வீடியோப் படத்தைப் போடுகினம். பாட்டும் சண்டையும் அங்கே ஏதோ ஒண்டை எடுத்து அமத்தி ஓடவிடுகினம். பிறகு என்னையா தங்கடை பிள்ளையளின்ர தொடக்குக் கழிப்பு, பிறந்தநாளுகள், தண்ணி வார்ப்புகள் என்று எடுத்த வீடியோக்களைப் போடுகினம், அது என்னென்றால் வீடியோ தொடங்கத் தொடங்கின சினிமாப் பாட்டுகள் முடியும் வரையும் பாட்டுத்தான் அதுகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத சினிமாப் பாட்டுகள், இது மட்டுமல்ல உங்க இரண்டு பேரின்ர சிநேகிதன் தான் யாரோ குமாரோ என்னவோ ஒரு பொடியன். அந்தப் பொடியன்ர கல்யாணத்துக்கு நானும் போயிருந்தேன். அங்கே ஒரு வீடியோக்காரப் பொடியன் எவ்வளவு கஷ்டப்பட்டு அங்கும் இங்குமாக மாறி மாறி ஓடித்திரிந்தது. அங்கே கொத்துப் பொடியள் நின்று ஒரே சிரிப்பும் கும்மாளமும் தான். அந்த வீடியோக்காரப் பொடியன் அந்த குஸ்பாத்திகளையும் எவ்வளவு நேரம் எடுத்ததை நான் பார்த்துக் கொண்டு இருந்தனான். இப்ப கொஞ்ச நாளுக்கு முன்னர் இவன் அந்தப் பொடியன்ர கொப்பியைக் கொண்டு வந்து போட்டான். அதென்ன? எல்லாம் பாட்டு மயம் தான். கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலம் ஒரே பாட்டுத்தான். ஐயர் மந்திரத்துக்கும் பாட்டுத்தான் பொடியளின்ர குஸ்பாத்திகளுக்கும்....

தம்பியவை நான் பாட்டுப் போடுறது பிழை என்று சொல்லவரவில்லை. இந்த நிகழ்ச்சிகளை ஒரு வீடியோவிலே... எடுக்கினம். ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் அதைத் திருப்பிப் பார்க்க வேண்டும் என்பதற்குத்தானே. எடுக்கின்ற படங்களோடு இயற்கையான அந்தச் சிரிப்புகள், அந்த குஸ்பாத்திகள் அதே சத்தங்கள் கலகலப்புகள் இருந்தால் இன்னும் சந்தோசமாயிருக்கும் என்டு நான்

நினைக்கின்றேன். உண்மையிலே உங்களுடைய இந்த வயதுத் தன்மைகளை ஒரு குறிப்பிட்ட காலத்தின் (வயது வந்தபின்) அதே சிரிப்புக்கள், அதே சேட்டைகள் - - நினைத்துப் பார்க்க நல்லா இல்லை...... ஏன் இவன் தம்பியும் தன் இரண்டு பிள்ளைகளின்ரை பிறந்த நாளுக்கும் ஒரே பாட்டுக்கள் தான் போட்டிருக்கிறான். மூத்த பேரன்ரை பிறந்த நாளென்று அவன் எத்தனை குழப்படிகள்.... ஆடுகின்றான் சிரிக்கின்றான்.. வந்திருந்த பொடியளோடு போய் எத்தனை அட்டகாசம் செய்கின்றான்... இந்தச் சம்பவங்களை அந்தப் பிள்ளை வளர்ந்தபின் ஏறக்குறைய பதினைந்து பதினாறு வயது வர அதை அவன் திருப்பிப் பார்த்தால் எவ்வளவு சந்தோசப்படுவான்..... இல்லையோ.....? அதைவிட்டிட்டு....... திருப்பிப் போட்டா ஒரே பாட்டாக இருந்தால்... யோசிச்சுப் பாருங்கோ.... அந்தப் பொடியன் என்ன நினைப்பான்..... எவ்வளவோ கவலைப்படுவானல்லே. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ இல்லை, சும்மா எடுக்கின்ற சாதார புகைப்படங்களுக்கும் நீங்கள் எல்லோரும் வைத்திருக்கின்ற வீடியோ கசற்றுக்களுக்கும் என்ன வித்தியாசம்.....? புகைப்படங்களே மிகவும் உயர்வானவை." அம்மா சொன்ன விடயம் எனக்குப் பெரிய உண்மையாகவே தெரிந்தது. நான் இவ்வளவு காலமும் இதைப்பற்றி யோசிக்கவில்லை. நானும் கூட முன்பு பொடியளோடு சேர்ந்திருந்த போது எடுத்த வீடியோக்கள் எல்லாவற்றிலும் பாட்டுக்கள் அல்லோ அடிச்சு வைச்சிருக்கின்றேன். சீ... அதையும் அப்படி இயற்கையாக வைத்திருந்தால்..... உண்மையிலே எவ்வளவு நன்றாக இருக்கும். அதுவும் எங்களுக்கு வயது வந்த பின்......... நினைத்துப் பார்க்க உண்மையிலே பெரிய கவலையாக இருந்தது.

டேய் நான் கூட உதை யோசிக்காமல் எல்லாம் செய்து போட்டேன். டேய் அந்த Sporge Skole இல் நடைபெற்ற கடைசிப் பார்ட்டி (Parti) யில் நடந்த முஸ்பாத்திகள் வாத்திமாரின் பகிடிகள்... வாத்திமாரோடை சேர்ந்து பாடிய பாட்டுக்கள்..... ஐயோ.. எனத் தலையில் கையை வைத்தான் ஜெனிபேட்.

தம்பிமாரே எனக்கு நித்திரை வருகுது நான் படுக்கப் போகின்றேன் என எழுந்து போனார்.

ஏதோ பெரிய பிழைகளைச் செய்து விட்டோம் என்ற மனநிலையில் இருவரும் மௌனமானோம்.

- முற்றும் -

- முரளி -

www.tamilarangam.net



# சஞ்சீவியின் பக்கம்

கடந்த 9/6/90 கொல்ஸ்ரப்ரோ தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைவிழா சிறந்த முறையில் நிகழ்ச்சிகளைத் தந்துதவிய சகல நிகழ்ச்சியாளர்களுக்கும் மற்றும், நிகழ்ச்சிகளை சிறந்தமுறையில் நடாத்தி முடிக்க உதவிய பார்வையாளர்களுக்கும், சகல வகையில் உதவிபுரிந்த எல்லோருக்கும் எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
விழாக்குழு சார்பாக
பொன். மகேஸ்வரன்

# FLYGTNING - 90

உலகத்திலுள்ள ஏழைகளிற்கும், அகதிகளுக்கும் உதவி செய்வதற்காக ஒவ்வொரு நான்கு வருடமும் டெனிஸ் அகதிகள் சங்கத்தால் பணம் சேகரிக்கப் படுகின்றது. இது 90ம் ஆண்டு நடைபெறுவதால் இதனை FLYGTNING 90 என அழைக்கின்றார்கள். இவ்வருடம் ஐப்பசி மாதம் 7ம் திகதி டென்மார்க் பூராகவும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இப்பணம் இலங்கை உட்பட உலகத்திலுள்ள அனைத்து அகதிகளுக்கும், ஏழைகளிற்கும் பயன் படுத்தப் படுகின்றது. ஆகவே ஐப்பசி 7ம் திகதி உங்கள் வீட்டுக் கதவுகளை நாம் தட்டும் போது உங்களால் இயன்ற உதவியினை வழங்கவும்.

இப்படிக்கு இதற்கு சார்பில்
பொன். மகேஸ்வரன்.






# கொல்ஸ்ரபுறோ-வில் கடைசியாக நடந்து முடிந்த கலை விழா பற்றி சிலரது கருத்துக்கள்..

சுருக்கமாகச் சொல்லப் போனால் பிடிக்காத விடயங்கள் என்று ஒன்றுமில்லை. ஐந்து வயதுச் சிறுவன் செல்வன் "விஜிதா"வின் நிகழ்ச்சி (ஓகன்) பாராட்டத்தக்கது. கொல்ஸ்ரபுறோ தமிழ் இளைஞர்கள் இப்படியொரு சிறப்பான விழாவினை நடாத்தி முடித்ததையிட்டு சந்தோசப்படுகின்றேன். இது "கொல்ஸ்ரபுறோ" இளைஞர்களின் ஒற்றுமையினையும் வளர்ச்சியினையும் எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஒற்றுமையும் செயல்பாடும் நிலைத்திருக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

—திரு. P. கருணாநிதி, Holstebro.

இதுவரையில் கொல்ஸ்ரபுறோவில் நடந்த விழாக்களில் மிகவும் சிறப்பான விழா இதுவாகும். இவ்வளவு திறம்பட நடாத்திய இளைஞர்கள் சில நிகழ்ச்சிகளைப் போடுவதில் கவனமெடுக்க மறந்து விட்டார்கள். நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் போது விழா நடாத்துபவர்கள் முன் கூட்டியே தெரிந்து வைத்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். (உதாரணம் Herning நாடகம்).

—திரு. N. சந்திரன், Holstebro.

மிகவும் நல்லதொரு விழா. டெனிஸ் ஆட்களின் பங்களிப்பு கூடுதலாகவிருந்தது. தமிழ் டெனிஸ் மக்கள் இரு சாராரையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தது. டெனிஸ் நிகழ்ச்சிகளான உடற்பயிற்சி, TAEK WON-DO, நடனம் இதுவரையில் எதிலும்

www.tamilarangam.net



எடுபாடில்லாதவர்களை நாங்களும் பழக வேண்டுமென்ற ஆர்வத்தினை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருந்தது. "சாம்ராட் அசோகன்" எங்களுடைய இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றதொரு நாடகம். தமிழ் நடனங்கள் சிறப்பாகவிருந்தது. டெனிஸ் மக்களும் தமிழ் மக்களும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் சிறந்ததொரு விழாவாக இந்தக் கலைவிழா அமைந்திருந்தது.

— திரு. இராமலிங்கம். சிற்சபேசன்,
Herning.

பொதுவாக எல்லா நிகழ்ச்சிகளும் நன்றாக இருந்தது. ஆனால் இப்படியான நிகழ்ச்சிகளை இலவசமாக நடாத்தினால் இன்னும் கூடுதலான சனம் வந்திருக்கும். தூர இடங்களில் இருந்து வருபவர்கள் போக்குவரத்து செலவினை விட டிக்கற்றுக்கும் செலவு செய்ய வேண்டும். அடுத்து "Holstebro"வில் நடந்த நிகழ்ச்சிக்கு Holstebro... Struer... மக்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. (Encourage பண்ணவில்லை) — சிவன் சக்தி நடனம் நன்றாக இருந்தது. டெனிஸ் நிகழ்ச்சிகளையும் கலந்து போட்டதால் டெனிஸ் மக்களையும் கவரக்கூடிய வகையில் விழா அமைந்திருந்தது. நீண்ட நேர விழாவானமையினால் தமிழ்ச் சாப்பாடுகள் மிகவும் மலிவாக வழங்கப்பட்டது வரவேற்கத்தக்கது.

— திரு. திருமதி R. நவபாலன்,
Herning.

Holstebro சனங்கள் கூடுதலாக வருகை தராதது பெரிய குறையாகும். டிக்கற் எடுத்தால் மட்டும் போதாது. நிகழ்ச்சிக்கும் வரவேண்டும். நாங்கள் வளர்ந்தவர்கள். இது போன்ற பல நிகழ்ச்சிகளை ஊரிலே பார்த்துவிட்டோம். ஆனால் எங்கள் குழந்தைகளுக்கு இப்படியான நிகழ்ச்சிகளை பார்ப்பது புதிய அனுபவமாகும். எங்கள் கலை, கலாச்சாரத்தினை பிள்ளைகளும் அறிந்து கொள்ள வாய்ப்பாகவிருக்கும். பிள்ளைகளுக்காக ஆவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தது. டெனிஸ் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து டெனிஸ் நிகழ்ச்சிகள் ஒழு-

www.tamilarangam.net



ஒரு நியாயத்தின் அடிப்படையில் தான் சில நிர்ப்பந்தங்கள் நேர்கின்றன. நிர்ப்பந்தங்கள் நேர்ந்த நிமிஷங்கள் தளர்ந்தாலும் அதன் நியாயங்கள் நிலைத்தே விடுகின்றன.

-ஜெயகாந்தன்-

---

நீடு செய்யப்பட்டிருந்தது வரவேற்கத்தக்கது. இங்கு இதுவரை யாரும் ஒருவரும் செய்யாத நிகழ்ச்சியாக இது அமைந்திருந்தது.

— திரு. திருமதி M. ஜெயரட்ணம்,
Herning.

தமிழ் ஆட்களைப் பொறுத்தவரையில் விழா நேரம் கூடி விட்டது. 3 மணியிலிருந்து 11 மணிவரை பொறுமையாக இருந்து நிகழ்ச்சியினைப் பார்ப்பதென்றால் மிகவும் கஷ்டம். மற்றப்படி நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தது. இன்னும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

—திரு. ஆனந், Hjerm.

நல்லதொரு நிகழ்ச்சி. டெனிஸ் நிகழ்ச்சிகளும் தமிழ் நிகழ்ச்சிகளும் கலந்து வருவது நல்லது. டெனிஸ் தமிழ் மக்களிடையே ஒற்றுமையினை ஏற்படுத்தக் கூடியதொரு முயற்சி. நடன நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தது. இன்னும் இது போன்ற நடன நிகழ்ச்சிகளை சேர்த்துக் கொள்ளலாம். 'சாம்ராட் அசோகன்' நாடகம் நன்றாக இருந்தது. நாடகங்களை கடைசியில் போட்டால் நல்லது. இந்த நிகழ்ச்சியில் நேரம் நன்றாக கடைப்பிடிக்கப்பட்டது. இதுவரை நடந்த விழாக்களில் இது சிறப்பாக இருந்தது.

— திரு. திருமதி. R. ஞானலிங்கம்,
Nr. Nissum.

(தொடர்ச்சி 56ம் பக்கம்)

www.tamilarangam.net



# ஜீரணமாகாத நாட்கள் இங்கே

டென்மார்க்கில்
இப்போது - நம்மவரின்
சைக்கிள்களைக்
கண்டவுடன்.
Den er nyt. (புதுச்சைக்கிள்)
இது இன்று நாம் - அன்றாடம்
கேட்கும் ஒன்று.

கண்டியிலும், மாத்தளையிலும்
இன்னும் பல இடங்களிலும்
கடைவைத்தும், கந்தோர்களிலும்
இன்னும் பல....
ஆனால் - அங்கும்
இந்த புதுச்சைக்கிள்
உணர்வுக்கு
தலை கொடுத்த - தலைவர்கள்
விளைவதனால்,
அங்கு
பல தடவை
இனக்கலவரங்கள்.

கைப்பையுடன்
இங்கு வந்த எமக்கு
இன்று
கைக்கொரு
வங்கிப் புத்தகங்கள் - புத்தகங்கள்
பக்கம் பிரிந்து
நின்றதனால்
குடும்பத்தில்
கலவரங்கள்.

www.tamilarangam.net



T.V பெயர்களுக்கு
பெருமைப் பட்ட நாள் போய்,
இன்று
பக்கத்து வீட்டில்
28 இஞ்சியில் – ஒன்று
இறங்கியதால்...
இஞ்சருமன் ஒரு ரிமோட்டில் என்றால்
சரியான சுகமப்பா....
இந்த
செல்லக் கதைகளினாலும்
குடும்பத்தில் – குட்டிக்
கலவரங்கள்.

கலியாண வீடு,
பூப்புனித நீராட்டு விழாக்களில்
எமது
கலாச்சார மரபுகளை
பாதுகாக்க கஷ்டங்கள் – பல
ஆனால்
வீடு திரும்பியதும்.
காஞ்சிபுரம், சேலம் – பட்டுக்களும்,
கல் அட்டியலும்
என்னை
தாச்சி மறித்ததனால் – என்னால்
பழம் போகமுடியவில்லை!!

வைபவங்களை
V.D.O. கமராக்கள்
படம் பிடித்த – நாட்கள்
இப்போ இல்லை!!
V.D.O க்களுக்காக
வைபவங்கள் – வைப்பதனால்
அன்புடனே வாழ்த்த

(தொடர்ச்சி மறுபக்கம்)

www.tamilarangam.net



வந்த
அன்பு உள்ளங்களை
இந்த நவீன A.K. 47 கள்
இடை மறித்து
காக்கவைக்கும்
நாட்கள் இப்போ.

எம்முடனே வந்தவர்கள்
இந்நாடு கடந்ததனால்
"எமக்கும்
அவ்வாழ்வு கிட்டவில்லை" என
அவன் கூற.
"எங்கடை பெட்டையின்
வயதில் உன்ரை
பூங்கொடியின் - கதை
காலத்தாலை, கடிதத்தில்
படித்தநீங்கள் தானே" என
அவன் கூற.
நம் குடும்பம்
மப்பும், மந்தாரமுமான
நாட்கள் இங்கே.

எங்கள் நிலை தெரியா
இளையவர்கள்
"உங்களுக்கென்ன
குடும்பகாரர்".... எனக் கூற
நாமும் பதிலுக்கு
உங்களுக் கென்ன
பொடியள் தானே" எனக் கூற
இங்கு
ஒரு நாட்டுப் பிரிவினையே
நடந்து கொண்டிருப்பதை
நாம் - அறியாத
நாட்கள் இங்கு.

www.tamilarangam.net



நம்பிக்கைகள்
நமக்குள்ளே
நாம் படிப்போம் புதிய - பாடம்
சுவிசில் தீக்கிரையான
அகதிமுகாம்.....
நாம் வாழும் நகரம் தோறும்
இன்னும் பல - கசப்பான,
விறைக்கவைக்கும் அனுபவங்கள்.
இந்நாட்டிலும்
அப்பப்ப தலை எடுக்கும் - தலைவாரிகள்.
இவைகளைச்
சொல்லி, பயம் காட்டி
சோறு ஊட்ட அல்ல.. புதிய
புயலடிக்க அறிகுறிகள்
தெரியும்
நாட்கள் இப்போ.....

— வளவன் —

# வாசகர்களின் கவனத்திற்கு.

நாம் சஞ்சீவி மலரினை ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியடைந்து விட்டது. பல நடைமுறைப் பிரச்சனைகளால் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வெளியிட முடியாமல் போய் விட்டது. ஆயினும் எமது அடுத்த வெளியீடான 10வது மலரினை நாம் சிறப்பாக வெளியிட விரும்புகின்றோம் ஆகவே உங்களால் முடிந்த சிறந்த ஆக்கங்களை எதிர் வரும் 10.08.1990 க்கு முன்னர் அனுப்பி உங்கள் ஒத்துழைப்பினை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

அன்புடன்
சஞ்சீவி.


www.tamilarangam.net



# சமுதாயச் சந்தையில்

மீராவின் தொடர் நவீனம்





"சுக்லாம் பரதரம்
விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்ப்புஜம்
பிள்ளையையும்
தாயையும்
கொண்டு வாங்கோ."

"சரியான கள்ளன்....
அழுது.. அடம்பிடிச்சு
பாலைக் குடிச்சிட்டுப்
பூனை போலக் கிடக்கிறார்."

"முதல் முதல் கோவிலுக்கு போறபோது
முழிவியளத்துக்கு உதவாததுகள் வராமல் பாரனை."

"அக்காவைக் கண்ணைத் திறந்து பாரடாகுட்டி
அக்காக்கு நீதான் சீதனம் கொடுக்கிறதாம்."

நாம் முடுக்கிவிட்ட கடிகாரம் எம்மையே வெருட்டி ஓட்டுவது போல,

நாமே வரைவுறுத்துக் கொண்ட வழக்காறுகள் உதித்த அம் மொட்டையைச் சுற்றி மொய்த்தன.

அது பாவம் என்ன செய்யும்?
அழத் தொடங்கியது.
பசியிலும் அழுதது;
பயத்திலும் அழுதது;

www.tamilarangam.net



முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற அது
கையில் எடுத்துக் கொண்ட முதல்
ஆயுதமே அழுகைதான்.

அதன் சாத்வீகப் போராட்டத்திற்கு
மனிதாபிமானமும் பாசமுள்ள பெற்றாரின்
பாராளுமன்றமும் தலை வணங்கின.

அந்த வெற்றியில் அது முலைசுவைத்துக் கொண்டிருந்தது.
கண்கள் திறந்து கொண்டன.

ஓர் உறவுப்படை அதன்முன் அணிவகுத்து நின்றது.
ஆம் பாசங்கள்.... பந்தங்கள்....
அவை கூட ஒருவகையில் BLACK MAIL தான்.

## கட்டம். I

துடக்கைக் கழிக்க வேண்டும் என்றோர் நாளைக் குறித்து ∴ அன்றே சாதிப்பிரிவுகள் மூன்றையும் தொடக்கி வைத்தனர் எம் பெற்றோர்கள்; ஏன் முடுக்கியே விட்டனர்.

தலைமுடி எடுக்கும் போது ஒரு "கிளிக்"
தட்சணை கொடுக்கும் போது ஒரு "கிளிக்"
பந்திக்குப் பட்டாடை விரிக்கும் போது ஒரு "கிளிக்"

படத்தைப் பிடித்துக் கொண்டது ரசிக்கா மட்டுமல்ல
அந்த ஜனனமும் தான்.

## கட்டம் II

சமயம்; அது ஓர் விருட்சம்.
அதன் கிளைகளும் விழுதுகளும் ஆயிரமாயிரம்.
ஆனால்
சமய வாதிகளும் சந்தர்ப்ப வாதிகளும்.

www.tamilarangam.net



ஆளுக் கொரு கொப்பை வெட்டித் தாம் உடைக்க முயன்றதனால் தாய்மரம் இன்று மொட்டையாகி விட்டது!

கூறு போடப்பட்ட அந்தச் சமுத்திரம் உப்பளங்களாகி விட்டது! காலங்காலமாகக் கண்ணைமூடிக் கும்பிட்டதாலோ என்னவோ கண்ணைத் திறந்து பார்க்க நமக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

என்ன செய்துவிட்டோம்?
புரியாத வினாக்களுக்கு
விடை புரியுமுன்பே - அறியாத
குழந்தையையும் அங்கே
கொண்டுபோய் விட்டோம்.

5/=, 2/=, 1/=, 50 சதம் என..... அதுவும் அர்ச்சனைத் துண்டுகளுடன் வரிசையில் நின்றது.

"அரோகரா"

தொடரும்.

# வாழ்த்துகிறேன் வளர்க சஞ்சீவி

கம்பன் கவிநயத்தில்
கருத்துக்கண் சஞ்சீவி - அவர்
கருத்துள்ள காப்பியத்துள்
உயிர்காத்த சஞ்சீவி
எங்கள் கலைப்பசிக்கு
இலக்கியமாய்ச் சஞ்சீவி
எழுந்து வந்து நிற்குதடா
டென்மார்க்கில் "சஞ்சீவி".

சவேரியான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு!

மலர் 8 கைக்குக் கிட்டியது. நன்றி. "கடிதங்கள்" பகுதியில் திரு. மீராவின் கடிதம் பிரசுரமாயிருந்தது. அக்கடிதம் சஞ்சீவிக்கு ஓர் சவால்தான். ஆனால் சஞ்சீவி அதற்கான சரியான பதிலை வழங்காமல் நழுவியுள்ளதோடு, ஆசிரியர் தலையங்கத்தில் (இதழ் 8) குறிப்பிட்ட கருத்துக்களுக்கு முரணாகவும் எழுதி தங்கள் ஊசலாட்டத்தை வெளிக்காட்டியுள்ளீர்கள். இவை சம்பந்தமாக எனது கருத்துக்கள் சிலவற்றை தெரிவிக்க விரும்புகின்றேன்.

1. நடு நிலை என்பது சந்தர்ப்பவாதம்தான். "எல்லாம் பக்கம் சாய்ந்ததே" சமூகப் பிரச்சினையில் தனி மனிதன் நடு நிலையில் நிற்க முடியாது. ஏதோ ஓர் பக்கத்தை ஆதரிப்பவனாகின்றான். "கூடக்குக் கழிப்பு" கதை எழுதிய திரு. மீராவும் ஒருபக்கம் சார்ந்தே எழுதியுள்ளார்.

2. நான் அனுப்பிவைத்த கவிதை ஒரு இயக்கம் கவிஞருக்கோ ஓர் இயக்க பிரச்சாரமோ அல்ல. அக் கவிஞர் நக்சலைட் என்பது உண்மை. உங்கள் தலையங்கத்தில் குறிப்பிட்டது போன்று "தனிமனிதனின் தவறையோ... குழுக்களின் தவறையோ வாசகர் மத்தியில் வெளிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்" (மலர் 8) என்பதை மேற்கூறிய கவிதை மறைமுகமாக விளக்குகிறது.

திரு. மீரா குறிப்பிட்டது போல் 'ஆதரிப்போர்கள் உங்களுடன் கை சேர்ந்து சஞ்சீவியை வளர்க்கவும், எதிர்ப்பவர்கள் சஞ்சீவியிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவும்' என்ற குழு நிலை வாதத்தால் வாசகர்களை, படைப்பாளிகளை பிரிக்காமல் சரியான, நியாயமான கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றை ஆக்கபூர்வமான விமர்சனத்திற்குட்படுத்தி வித்தியாசமான கருத்துக்களுள்ளோரை விவாதத்தில் மேலும் (தனிநபர் விரோதம், இயக்க விரோதம் இல்லாமல்) தெளிவுபடுத்த சஞ்சீவி தளம் அமைத்துக்

www.tamilarangam.net



கொடுத்து தமிழ் மக்கள் மத்தியில் ஓர் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அன்புடன்
T. சௌந்தர்.

சஞ்சீவிக்கு

என்னைப் போன்ற சிறார்களை நீங்கள் மறந்து விட்டீர்களா? என்போன்றோர் எழுத்துக் கூட்டி வாசிப்பதற்கு பெரிய எழுத்தில் காகமும் வடையும் நரியும் திராட்சைப் பழமும் போன்ற கதைகளை உங்கள் மலரில் இடம் பெறச் செய்தால் நாமும் சஞ்சீவியை எதிர்பார்த்து ஒவ்வொரு மாதமும் காத்திருப்போம்.

நன்றி.


சுபா
(9 வயது)
6940 LEM

# முக்கிய கவனத்திற்கு

அன்பான வாசகர்கட்கு!

சஞ்சீவியின் எதிர்கால வளர்ச்சி கருதி 10வது மலர் வெளியீட்டின் பின்பு உங்களோடு சஞ்சீவிக் காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். இதில் கலந்து கொண்டு சஞ்சீவியின் வளர்ச்சிக்கு மேலும் ஒத்துழைப்புத் தர விரும்புபவர்கள் உங்கள் பெயர்களையும், விலாசத்தினையும் கூடிய விரைவில் எங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- சஞ்சீவி -



# மோபியாகூஸ்:
## ஒரு சந்திப்பு

கொல்ஸ்ரப்போவிலுள்ள மோபியா-கூஸ் [MÅbjer hus] என்னும் இடத்திலுள்ள தனித்து அகதிக்குழந்தைகளுக்கென அமைந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் பணிபுரியும் திருமதிகள் "இங்கா" "பூடில்" "லீசா" "ஜெனா" "ஜேசா தேவதாஸ்" ஆகிய ஐந்து பராமரிப்பாளர்களையும் இங்கு "சஞ்சீவி" சார்பில் பேட்டி காண்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஏற்கனவே எடுத்துக்கொண்ட நேர ஒதுக்கீட்டின் பிரகாரம் நானும் எனது நண்பன் மகேசனும் சுமார் ஒரு மணிபோல் அங்கு போய்ச் சேர்ந்தோம். அந்த ஐந்து பெண்மணிகளும் எம்மிருவரையும் அன்போடு வரவேற்றனர். எங்கேயோ விளையாடிக் கொண்டிருந்த சிந்துவும் அவளது தம்பியும் Hej மாமா என எம்மிடம் ஓடிவந்து ஒட்டிக்கொண்டார்கள். நீங்கள் தேனீர் குடிப்பீர்கள் தானே என்ற கேள்வியோடு அருகிலிருந்த சோபாவில் எம்மை அமரச் சொன்னார்கள்.

இருப்பதற்கு முன்னர் நாம் இருவரும் ஒரு கணம் அந்தச் சிற்றாடலை நோட்டம் விட்டோம். நிரையாய் விடப்பட்டிருந்த அந்த குழந்தைகளின் வண்டி ஒன்றில், விளையாடிய களையோ என்னவோ றெஜன் அங்கு நிம்மதியாய் நித்திரை கொண்டான். அங்கு நிலவிய அமைதியும் சுற்றி வளைக்கப்பட்டிருந்த அந்த அழகான மரஞ்செடிகளின் அமைப்பும் அந்தனை

www.tamilarangam.net



வெயிலில் விரிய இளந்தென்றலும் எம்மிருவரையும் இன்னும் இதம்-படுத்தியது. சிறிது நேரத்தின் பின்னர் பேட்டி ஆரம்பமானது.

கேள்:- குழந்தைகளைப் பராமரிப்பது, பாதுகாப்பது என்பது மற்ற வேலைகளை விட மிகவும் கஸ்ரமானது என்று நினைக்-கின்றோம் இதுபற்றி உங்கள் கருத்து?

பதில்:- மற்ற வேலைகளை விட மிகவும் பொறுப்பானது என்பதும் கஸ்ரமானது என்பதும் உண்மை தான். உ+ம் குழந்தைகளை வேறு இடங்களுக்கு கூட்டிச் செல்லும் வேளையில் அவர்க-ளது உயிருக்குக்கூட நாமே பொறுப்பானவர்கள். இந்தப்பராம-ரிப்பு சம்பந்தமான மூன்று வருடப் படிப்பும் தொழில் ரீதியான அனுபவங்களும் எமக்கு நடைமுறைக்கு இலகுவாக இருக்கின்றது

கேள்:- குழந்தைகளின் பிரச்சினைகளை எவ்வாறு புரிந்து கொள்கின்-றீர்கள்?

பதில்:- டெனிஸ்க் குழந்தைகளைப் புரிந்து கொள்வது மிகவும் இலகுவான-து, ஏன் என்றால் பெற்றோர்கள் குழந்தைகளை வந்து கூட்டிக் கொண்டுபோகும் வேளையில் என்னென்ன செய்தார்கள் தம் குழந்தைகள் எனக் கேட்டுத்தெரிந்து கொண்டே போவார்கள். ஆனால் வெளிநாட்டுப் பெற்றோர்கள் அப்படியில்லை. குழந்தைகளைப் பொறுத்தவரையில் (வெளிநாட்டு) அவர்களது சைகைமூலமும், அந்தந்தச் சந்தர்ப்பங்க-ளைப் பொறுத்தவரையிலும் கொஞ்சம் புரிந்து கொள்ளலாம். இரண்டு வெளிநாட்டுக்குழந்தைகள் தங்களது மொழியில் கதைக்கும் போது எம்மால் கொஞ்சமும் புரிந்து கொள்ள முடிவதில்லை.

கேள்:- ஒரு டெனிஸ் குழந்தையைப் பராமரிப்பதற்கும் ஒரு வெளிநாட்டுக் குழந்தையைப் பராமரிப்பதற்குமுள்ள வேறுபாடுகள் என்ன?

பதில்:- முதலாவது பிரச்சினை ஒரு வெளிநாட்டுக் குழந்தைக்கு அதிக நேரம் எடுக்கும். தாய் தகப்பனோடு தொடர்பு கொள்வது மிகவும் சிரமம். (மொழிப்பிரச்சினை) இரண்டாவதாக இன்றைய பிரச்சினை உடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்த்துக் கொள்ளமுடியாது. கடைசியாக மற்றநாட்டுக் குழந்தைகளை விட குறிப்பாகத் தமிழ்க் குழந்தைகள் அதிகமாக வெட்கப்படுதல் உடன் கூட்டாக பாடுவது ஆடுவது போன்ற விடயங்களைக் குறிப்பிடுச் சொல்லலாம்.

கேள்:- உங்களோடு சேர்ந்து வேலை செய்யும் ஒரு வெளிநாட்டவரது நிலை ஒத்துழைப்பு எந்த வகையில்?

பதில்:- புதிதாக வந்த நேரம் கொஞ்சம் வெட்கப்பட்டவர்கள். ஆனால் காலப்போக்கில் எம்மோடு நன்றாக ஒத்துழைக்கின்றார்கள் இதுவெல்லாம் அவர்களது கலாச்சாரத்தோடு ஒட்டிய விடயங்களாக இருக்கலாம் என எமது நாலு வருட அனுபவம் மூலம் உணர்ந்திருக்கின்றோம். இதே போலவே குழந்தைகளும் [தமிழ்க்குழந்தைகள் மற்றக்குழந்தைகளை விட] தமக்கு வயதுக்குக்குறைந்த குழந்தைகளை மிகவும் அவதானமாகப் பாதுகாப்பார்கள், அத்தோடு தம்மிடமிருக்கும் மிகச்சிறிய உணவையாவது மற்றவர்களுக்கும் கொடுத்து உண்பார்கள்.

கேள்:- இரண்டு வித்தியாசமான வெளிநாட்டுக்குழந்தைகளைப் பராமரிப்பதிலுள்ள வேறுபாடுகள் என்ன?

பதில்:- பொதுவான ஒரு வேலையைக் கொடுத்தால் மற்றநாட்டுக்குழந்தைகளை விட குறிப்பாகத் தமிழ்க் குழந்தைகள் அதை மிகுந்த அக்கறையோடும் அமைதியாகவும் ஒழுங்காகவும் செய்து முடிப்பார்கள்.

கேள்:- ஒரு வெளிநாட்டுக் குழந்தை டெனிஸ் குழந்தைகளோடு பழகுவதாலும் டெனிஸ் பராமரிப்பாளரின் கவனத்தில் அதிக நேரம் இருப்பதாலும் அவர்களது சொந்தக் கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் மறக்க ஏதுவாகின்றது. இது பற்றி..?

பதில்:- இந்தப் பிரச்சினைக்கு மிகவும் பொறுப்பானவர்கள் ஒவ்வொரு பெற்றோரும் தான். ஒவ்வொரு பெற்றோரும் மிகமுக்கிய கவனமெடுக்க வேண்டும்.

www.tamilarangam.net



கேள்:- ஒரு வெளிநாட்டுக் குழந்தை தனித்து டெனிஸ் மொழியைக் கதைப்பது பற்றி?

பதில்:- இது கூட தாய் தந்தையரில் தான் தங்கியுள்ளது. ஒவ்வொருநாளும் தங்கள் தாய்மொழியைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும், அப்போது தான் அதுகள் தங்கள் சொந்த மொழியை மறக்க மாட்டார்கள்.

ஒரு சிறிய சம்பவம், ஒருநாள் நான் நடைபாதையில் போய்க் கொண்டிருந்த போது ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சந்திக்க நேர்ந்தது, அங்கு நின்ற அவர்களது குழந்தையைப் பார்த்து எனக்குத் தெரிந்த ஒரு தமிழ்ச் சொல்லைக் கூறினேன். அந்தப் பெற்றோர்கள் "குழந்தைக்குத் தமிழ்த் தெரியாது "De snakker kun Dansk" என்று பெருமையாகச் சொன்னார்கள். இது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை என்று அங்கு இருந்தவர்களில் ஒருவர் முந்தியடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டே சொன்னார்.

கேள்:- வெளிநாட்டுப் பெற்றோர்கள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

பதில்:- இந்நாட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சிறுபருவத்திலிருந்து கட்டுப்படுத்தி வயது வர வர மிகவும் சுதந்திரமாகத் திரியவும் விடுகின்றார்கள். ஆனால் வெளிநாட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை குழந்தையிலே சுதந்திரமாகத் திரியவிட்டு வயது வரவர அவர்களைக் கட்டுப்படுத்துகின்றார்கள் இந்த நிலையை நன்கு யாவரும் அறிவீர்கள் தானே.

கேள்:- பொதுவாக டென்மார்க்கில் இந்தக் குழந்தைகளைப் பராமரிப்பு என்ற அமைப்பு எப்போது ஆரம்பமானது?

பதில்:- 1960ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த முறை இங்கு ஆரம்பமானது என்று நினைக்கின்றோம், ஏன் என்றால் இந்த ஆண்டுக்குப் பிறகுதான் பெண்கள் பெரும்பாலாக வேலைக்குச் செல்லத் தொடங்கினார்கள் அதுதான் காரணம்.

(தொடர்ச்சி 46ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பற்களை எவ்வாறு பராமரிக்கிறீர்கள்?

பொதுவாக புளோரைட் என்னும் சத்து உணவில் இருந்தால் பற்கள் உறுதியாகின்றன. எனவே தாயின் உணவிலும், குழந்தையின் உணவிலும் ஒரு துளியாவது இருந்தால் தான் குழந்தையின் பற்கள் உறுதியாக முளைக்கும்.

தண்ணீரில் இயற்கையாகவே இச்சத்து இருக்கும் நாடுகளில் சொத்தைப் பல் குறைவாகவே காணப்படுகின்றது. பொது நல முறைகளில் ஒன்றாக இப்பொழுது முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் "புளோரைட்" சத்தை வெகு சிறிதளவில் தண்ணீரில் கலக்கின்றார்கள். இதைச் சிலர் எதிர்க்கிறார்கள். இதனால் உடல் நலம் கெட்டு விடும் எனக் கருதுகின்றனர். ஆனால் பொறுப்புள்ள விஞ்ஞானிகள் இதைப்பற்றித் தீர ஆராய்ந்து இதனால் கெடுதல் ஒன்றும் இல்லை எனக்கண்டுபிடித்துள்ளனர்.

ஆனால் சொத்தைப் பற்களுக்கான எல்லாக்காரணங்களும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. பற்கள் விடயத்தில் குழந்தையின் உணவிலும், தாயின் உணவிலும் முக்கியமாக கவனிக்கப்பட்டாலும், பரம்பரைத் தன்மையும் இதில் பங்கு பெறுகின்றது.

ஆரம்பத்தில் உறுதியாகக் காணப்படும் பற்கள், பின்னர் சொத்தையாகலாம். சொத்தைப் பற்களுக்கு முக்கிய காரணம் "லாக்டிக்" அமிலமாகும். பற்களின் மேல் உள்ள சர்க்கரையிலும், மாச்சத்திலும் உள்ள நோய்க்கிருமிகள் இந்த "லாக்டிக்" அமிலத்தை உண்டாக்குகின்றன. சாதாரணமாக ஒருநாளில் எவ்வளவு அதிக நேரம் பற்களின் மேல் சர்க்கரையும், மாச்சத்தும் ஒட்டிக்கொண்டிருக்கின்றனவோ அவ்வளவு அதிக நோய்க்கிருமிகள், அதிக "லாக்டிக்" அமிலத்தை உண்டாக்கின்றன. இந்த அமிலம் பற்களில் ஓட்டையை உண்டாக்கி விடுகின்றன. ஆகையால் தான் உணவு வேளைகளுக்கிடையே இனிப்புத் தின்பண்டங்களும், பேரீச்சம்பழம் போன்ற உலர்ந்த பழங்களும், "பிஸ்கட்" மற்ற பற்களில் ஒட்டிக் கொள்ளக்கூடிய தின்பண்டங்களும் குழந்தைகளுக்கு கொடுக்கக் கூடாது. இவைகளினால்

www.tamilarangam.net



பற்களில் சொத்தை அதிகமாகலாம்

பழங்களிலும், காய்கறிகளிலும் உள்ள சர்க்கரை குறைவாக இருக்குமாகையால் அவை பற்களிலிருந்து விரைவில் கழுவப்பட்டு விடுகின்றன. உணவுடன் உட்கொள்ளும் பழங்கள், உருளைக்கிழங்கு, தானிய வகைகள் முதலியன பற்களில் அதிக நேரம் ஒட்டிக் கொண்டு இருப்பதில்லை. ஆனால் உணவு வேளைகளுக்கு இடையில் உட்கொள்ளும் தின்பண்டங்கள் தான், நீண்ட நேரம் பற்கள் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும்

எனவே தாய்மார் இது விடயத்தில் அக்கறை எடுத்து தங்கள் குழந்தைச் செல்வங்களின் பற்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

நன்றி "வீரகேசரி"

(44ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்:- இறுதியாக ஓர் கேள்வி, வெளிநாட்டுப் பெற்றோர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்:- இங்கு வாழும் பெரும்பாலான வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு தங்களது சொந்தக் கலாச்சாரம், பண்பாடு, மொழி என்பவற்றை மறந்து போயிருப்பதை விட அவை என்னவென்றும் தெரியாமல் இருக்கின்ற நிலை தான் இங்கு காணப்படுகின்றது. மொழியையும், கலாச்சாரத்தையும் மறக்காமல் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்தோடு இந்த நாட்டுக் கலாச்சாரத்தோடும் மக்களோடும் சேர்ந்து வாழக்கூடிய வகையிலும் பழக்கிக் கொள்ள வேண்டும்.

சிரமம் பாராது இவ்வளவு நேரமும் எமக்காக இந்தப் பேட்டியைத் தந்தற்கு நன்றிகள் பல தெரிவித்தோம். தாங்களும் இந்தப் பத்திரிகை மூலம் பெரும்பாலான தமிழர்களைச் சந்திப்பதை விட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம், இப்படியாக ஒரு சந்தர்ப்பம் தந்தமைக்கும் நன்றிகள் பல.

சுமார் நாலுமணி போல் நல்ல விடயங்களை தெரிந்து கொண்டோம், வாசகர்களுக்கும், குறிப்பாக பல குடும்பத்தர்களுக்கும் இது நன்கு பயன்படலாம் என்ற மனத்திருப்தியோடும் சந்தோசத்தோடும் அவ்விடத்தை விட்டு இருவரும் வெளியேறினோம்.

-முற்றும்-

www.tamilarangam.net



# ஒரு மாணவனின் அனுபவம்

Mange danskere er interesseret i at høre historier fra Århus. En af dem handler om at to mænd har opdaget en ny dyreast.

De to mænd havde besluttet sig til at rejse til Afrika for at gå/på jagt. De glædede sig til at rejse og var slet ikke bange for at blive ædt. Selvom folk gjorde dem opmærksom på, at de kunne blive farligt. De havde sørget for, at deres geværer var i orden

Turen gik godt, og ved hjemkomsten pralede de af, at havde skudt to løver, en elefant, tre zebraer og to "noser". Deres venner vidste ikke havd "noser" var, og uden at blinke fortalte de to jægere, at "noser" var brune dyr, som gik på to ben til trods for, at de havde fire. De holdt forbenene op og skreg "No Sir"

(grundbog i engelsk grammatik-2, Opgave 4-D, Lisbeth Johansen, Inge Kirkegård)

வகுப்பில் என்னைத் தவிர ஏனையோர் இந்த நாட்டைச் சேர்ந்த மாணவ மாணவிகள் (வயது வந்தவர்கள் வகுப்பு V.U.C) மேற்கண்ட பகுதி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. இதை சிறு சிறு பகுதியாகப் பிரித்து ஒவ்வொருவராக எல்லோரும் கேட்கும்படி மொழிபெயர்த்த பகுதியை வாசித்துக்காட்டினோம். முடிவில் வகுப்பே "கொல்" என்று சிரித்தது சிலர் என்னை நோக்கிவிட்டு சிரித்தார்கள் மிகவும் வேதனையாக இருந்தது. குனிந்து புத்தகம் பார்ப்பது போல் பாசாங்கு செய்வதா? அல்லது அவர்களைப் பார்த்து அசடுவழியச் சிரிப்பதா? என்று தெரியாமல் சற்று திணறிப் போனேன். நல்ல வேளை ஆசிரியை அடுத்த பாடத்துக்குச் செல்வதன் மூலம் சற்று விடுதலை செய்தார்.

— ஏ. சிறிஸ்காந்தராசா —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




3 பால் 10 குரோனர் 3 மஜரின்.... இப்படியாக எங்கெங்கு மலிவாக சாமான்கள் உள்ளன என்று நோட்டம் விட்ட சுந்தரத்தார் திடீரென, இஞ்சையப்பா 'விடை இறைச்சி' மலிவாகப் போட்டிருக்கு.... என்று முதல் நாள் பேப்பரைப் பார்த்தபடி கேலி செய்தார். சும்மா அலட்டாமல் 9³⁰ க்கு சுப்பர்மார்க்கட் துறப்பாங்கள்........ அங்கை, இங்கை கதைச்சு மினைக்கெடாமல் கெதியா வீட்டை வாங்கோ இனி உங்க இஷ்டம் என கூறியபடி தேநீரை சுந்தரத்தாரிடம் கொடுத்தாள் சின்னன். சுந்தரம் தேநீரை வாங்கியபடி

'தொடையை செவியன் விடை ஏறி... என வாய்க்குள் முணுமுணுத்தார்.

உந்தச் சேட்டையை விடுங்கோ எண்டு எத்தனை நாள் சொல்லிறது.... சின்னன்.

கதவில் உள்ள தபால் போடும் இடைவெளி திறப்பது போல் சத்தம் கேட்க "கடிதம்" என்று கூறியபடி கதவருகே ஓடியவள் தரை மீது விழுந்த கடிதத்தினை எடுத்து விலாசத்தை படித்தாள்.

செவ்வந்தி ! சின்னனின் பள்ளித் தோழி. அது மட்டுமில்லாமல் சுந்தரத்தின் மைத்துனனை மணந்ததனால் இன்னும் இறுக்கமாகவே நட்பு உறவாக மாறியிருந்தது. கடிதத்தைப் பிரிப்பதற்கு

www.tamilarangam.net



முன்பு சின்னனின் முகம் வாடியிருந்தது

"என்னப்பா கடிதம் எண்டு ஓடினாய்.... பிறகு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வாறாய்." எனக் கிண்டலாகக் கேட்டார் சுந்தரம்.

"இல்லையப்பா... செவ்வந்தியின் கடிதம்." சின்னன்.

"சரி என்னெண்டு உடைத்துப்படி தெரியும் தானே. அதுக்கு ஏன் முகத்தைத் தொங்கப் போடுகின்றாய்.

கடிதம் உடைக்கப்பட்டு சிறிது நேரம் வரை மௌனமாய் இருந்த சின்னன்-

"என்னப்பா, ஜெயமும் போய்ச் சேர்ந்திட்டுது! அவளுக்கும் யாரப்பா இருக்குது? இப்ப உள்ளது அவன் நடுவிலான் தான். அவனுக்கும் இப்ப சுகம் இல்லையாம்" சின்னன்.

சுந்தரத்தார் அட்டகாசமாக அரசியல் பேசியவரல்ல. ஆனால் அவரை அன்றாடம் பாதித்த சம்பவங்களை அரசியலாகப் படிக்கத் தவறவில்லை.

1983 இல் இலங்கை அரசின் கடல் வலையச் சட்டம், கடலில் இறங்குபவர்கள் பயங்கரவாதிகள் எனவும், கடலில் மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டிருந்தது. அன்று முதல் இருந்த நகை நட்டுகளை அடவு வைத்தும், முடிவில் விற்றும் வாழ்க்கையை ஓட்டி வந்த ஜெயம் கடைசியில் குழந்தை மனைவியின் வறுமை நிலை கண்டு மீன்பிடிக்க கடலில் இறங்கிய முதல் வாரமே இலங்கை கடல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆனால் அவன் இறந்ததை இன்று வரை சுந்தரத்தால் நம்பமுடியவில்லை.

ஆனால் ஜெயம் இல்லாததன் விளைவு ஒரு குடும்பம்...... சுந்தரத்தின் மௌனத்தைக் கலைக்கும் விதத்தில்.

"அவன் பூமணியும் இயக்கத்துக்குப் போட்டாள்." என்றான் சின்னன்.

www.tamilarangam.net



"அதுக்கு என்னப்பா செய்கிறது... ?"

என்று சுந்தரத்தார் சொன்னாலும், ஒரு அரசு தனது பிரஜையை, பிரஜை என்று பாராமல் தானே அழிப்பது, எந்த விதத்திலும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது..

பூமணி பெண் பிள்ளை எண்டாலும் அவளின் முடிவை பிழையென்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது!" சுந்தரம்.

என்னப்பா வயது அவளுக்கு....? 13 வயது தானே.

ஏன் இலங்கையும், இந்திய அரசும் வயசு வித்தியாசம் பார்த்தே ஆட்களை அழிக்குது...'

"சும்மா தர்க்கவியல் இப்ப வேண்டாம். செல்வந்திக்கு என்ன.... என்னப்பா அது.... கிடங்கு கிண்ட வாரம், கடிதத்தை மீண்டும் ஒருதரம் நோட்டம் விட்டு விட்டு அது தான் "பதுங்கு குழி" தோண்ட வேண்டுமாம். அதை வெட்டிற ஆங்கள் காசு கையிலை வைத்தால் தான் வெட்டுவாங்களாம். இல்லாவிட்டால்...."

"என்னப்பா நீ என்னவோ எனக்கு செல்வந்திபிள்ளைகளில் அக்கறை இல்லை எண்ட மாதிரி கதைக்கிறாய்" எனக்கூறி சுந்தரம் மௌனமானார்.

எதையுமே சின்ன விசயமாக எடுக்காத சின்னையின் சுபாவம்— அன்று 87 இல் ஜெயம் இறந்த போது, இங்கு வீட்டையே இழவு வீடாக மாற்றியவள்... 5 நாட்கள் சரியாக சாப்பிடாதவள்.. இவர்கள் வாழும் நகரத்தில் எவர் ஒருவரின் உறவினர்களுக்கு ஏதும் அசம்பாவிதம் நடந்தாலும், அங்கு சுகம் விசாரிக்க தவறாதவள்... சுந்தரம் வெளியில் காட்டிக் கொள்ளா விட்டாலும் அதே உள்ளடக்கம் கொண்டவர்.

www.tamilarangam.net



சின்னன் இங்கை வாறும். அது சரி முதல் வெட்டிய "பதுங்கு குழி" இப்ப பாவிக்க முடியாதே..? சுந்தரம் கேட்டு வாயை மூடுமுன்.

"உங்களுக்கென்ன மேனை மாறாட்டமே. அதைத் தானே இந்தியன் ஆமி இடிவு விழுவான் நின்டு மூடினவனாம். பிறகு பெய்த மழையிலை மண் இறுகிப் போச்சாம். அது போக ...... அதுக்குள்ளை தான் சின்னவன் பழத்துக்கு பாம்பு கடித்து ....... அப்படியாப் போச்சு" என்றான் சின்னன்.

"அது தெரியும் தானே சின்னன். இப்ப உள்ளது நடுவிலான் கட்டியன் தானே அவனுக்கும்... சுகம் இல்லை" என்டுறாய் கடிதத்தை கொடுப்பம்.

"இங்கை பாருங்கோ கடிதம் கிடக்கட்டும். இப்ப சரியான பிரச்சனை, எங்கடை ஊரெல்லாம் குண்டு (பொம்பர்) போடுறாங்களாம். பொம்பர் விழுந்த இடமெல்லாம் பல மணிநேரம் நெருப்பு எரியுதாம்.." சின்னன்.

அங்கை ஏதோ பிரச்சனை, இங்கை என்னெண்டால் "சிறீலங்கா புரோக்கிராம்" என்று புத்தரையும், பறவைகளுக்கு சுதந்திரம், விலங்குகளின் சொர்க்கம் என்டு T.V.யில் காட்டுறாங்கள். இன்றைய பிரச்சனையைச் சொன்னாலும் பிரியோசனமாயிருக்கும். எங்கடை பிரச்சனை இவங்களுக்கு விளங்குதில்லை. விளங்கினாலும் வெளியில் காட்டிக் கொள்ளுகின்றான்கள் இல்லை. அங்கை என்னெண்டால் ஆகாயத்தில் இருந்து போடப்படும் பொம்பரின் விளைவு ஒரு படி முன்னேறி பலமணிநேரம் தீ பற்றி எரிகின்றது. அங்குள்ள சனங்களை-

யூதர்களை அழிக்கும் முடிவில் சிறிதளவு மாற்றமும் செய்யாமல், கொல்லும் உத்திகள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டது. தூக்கிலிட்டும், துப்பாக்கியால் சுட்டும், இறுதியில் நச்சு வாயுவினாலும் சாகடித்தான் - ஹிட்லர்.

www.tamilarangam.net



என்னி நாங்கள் எல்லாப் பக்கத்தாலும் மண்டையைப் போட்டு உடைக்க வேண்டியது தான்" சுந்தரம்.

"ஐயோ இவங்களை கதையை விடுங்கோ. கொஞ்சம் காசு செவ்வந்திக்கு அனுப்புவம். அவளின் நிலைமையை நினைக்கக் கவலையாயிருக்கு. அவள் இருந்த இருப்புக்கு...."

"சின்னன். இதுதான் இன்றைக்கு தமிழ் மக்களின் நிலையும்." என்றார் சுந்தரம்.

"என்னப்பா திரும்பிரண்டு உதாரணம் சொல்லிக் காட்டுறியள்" என்று சற்று கோபமாக சின்னன் கேட்டான்.

'சின்னன் தனக்குத் தனக்கு காய்ச்சலும் தலைவிடியும் வந்தால் தான் வருத்தத்தைப் பற்றி தெரியும். இது தான் உண்மையான நிலை" சுந்தரம் சின்னனுடன் பேசிக் கொண்டிருந்தாலும் அவள் கடிதத்தை மறைப்பது போல் ஒரு சாயல் தென்பட்டதை கவனிக்கத்தவறவில்லை.

"சின்னன் கடிதத்தை தாரும்" சுந்தரம்.

"செவ்வந்தி உங்களுக்கு காட்ட வேண்டாம். என்று எழுதியிருக்கிறாள்"

"சரியப்பா நான் பார்க்கவில்லை. என்ன எழுதியிருக்கிறாள் என்று நீயாவது வாசித்துக் காட்டு". சுந்தரம்.

"என்னவோ நீங்கள் பிடித்தால் உடும்பு பிடிமாதிரி." என்று சொல்லிக் கொண்டு சில வினாடிகளின் பின்பு.... அதப்பா..... நான் முன்பு சொன்னதுகள் போக, கடைசியா..... "முக்கிய விசயம். அண்ணன் கடிதம் படித்தால் இரவு நித்திரை கொள்ளாமல்

www.tamilarangam.net



இருக்கும். அதனால் இழப்பு வரும். அன்னையின் மனக் கஷ்டத்துடன் வருத்தத்தாலும் கஷ்டபட வேண்டாம்.... என்ன... இவ்வளவுதான். என்றான் சின்னன்.

இதைக் கேட்டதும் மனத்தின் அடித்தளத்தில் மறைத்து வைத்திருந்த கவலையின் முழு உருவம் எழ நினைத்ததோ என்னவோ சுந்தரத்தின் கண்கள் பனித்தாலும் அது சிற்றோடையாகியது. அந்தச் சிற்றோடையில் எழுதப்படாத இவ்வரிகள்.

"எத்தனையோ கஷ்டங்களின் மத்தியிலும் உறவுகளையும் அதன் உணர்வுகளையும் உயிருடன் வைத்திருப்பது எமது சொந்த மண்தான்"

-சிவா-

—முற்றும்—

# வாழ்த்துகின்றோம்

Alborg Kommune உம் Dansk Flygtningehjælp உம் 1990 ஆண்டு நடாத்திய ஓவியப் போட்டியில் முதலாவது பரிசினை (10.000 குறோனர்) பெற்றுக் கொண்ட திரு T. சௌந்தர் அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள். அவர் ஓவியத்துறையில் இன்னும் பல புதிய சாதனைகளைப் புரிய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

• சஞ்சீவி •

தொலைக்காட்சியில் (Euro sport) வாராவாரம் நடைபெறும் "Fun Factory" "D.J. cat" நிகழ்ச்சிகளில் சிறந்த ஓவியத்திற்கான பரிசினைப் பெற்றுக் கொண்ட சிறுவன் J. ஜனார்த்தனன் (ஜனா- வயது 12) அவர்களுக்கும் எங்கள் பாராட்டுக்கள். அவரும் இன்னும் பல வெற்றிகள் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

• சஞ்சீவி •

# தேதிக்கு கிழமை கண்டு பிடிக்க வழி

1900 முதல் 1999 வரை உள்ள ஆங்கில வருஷங்களில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேதி என்ன கிழமை என்று மனதில் கண்டு பிடித்து சொல்லும் வழியாவது:- இதற்கு கீழேயுள்ள குறிப்பை ஞாபகத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

**சாதாரண வருஷங்களில்** (ஒரு வருடத்தில் 365 நாட்கள்)

| | |
|---|---|
| ஜனவரி | - 0 |
| பிப்ரவரி | - 4 |
| மார்ச் | - 4 |
| ஏப்ரல் | - 1 |
| மே | - 6 |
| ஜூன் | - 3 |
| ஜூலை | - 1 |
| ஆகஸ்டு | - 5 |
| செப்டம்பர் | - 2 |
| அக்டோபர் | - 0 |
| நவம்பர் | - 4 |
| டிசம்பர் | - 2 |

**லீப் வருடங்களில்** (ஒரு வருடத்தில் 365¼ நாட்கள்)

| | |
|---|---|
| ஜனவரி | - 1 |
| பிப்ரவரி | - 5 |

ஏனைய மாதங்கள் எல்லா வருடங்களிலும் ஒரே எண்ணைக் கொண்டவையாகும்.

www.tamilarangam.net



கொடுக்கப்பட்டுள்ள வருசத்தில் நூற்றாண்டாகிய 19 ஐ நீக்கிய எண்ணுடன், அதை 4 ஆல் வகுத்து வரும் ஈவையும் (எண்ணை) கொடுக்கப்பட்ட தேதியையும் கூட்டி கொடுக்கப்பட்ட மாதத்துக்கான மேலே கண்ட எண்ணை கழித்து 7 ஆல் வகுத்தால் வரும் மீதி 0 அல்லது 1 முதல் 6 வரை வரக்கூடும், அதைக் கொண்டு கீழுள்ள ஒழுங்கின்படி கிழமையினைச் சொல்லவும்.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – | 0 |
| திங்கள் | – | 1 |
| செவ்வாய் | – | ௨ |
| புதன் | – | 3 |
| வியாழன் | – | 4 |
| வெள்ளி | – | 5 |
| சனி | – | 6 |

உதாரணம்:-

30-01-1948 மகாத்மா காந்தியின் அமரத்வ தினம் என்ன கிழமை என்று பார்ப்போம்.

| | |
|---|---|
| நூற்றாண்டாகிய 19 ஐ நீக்கிய எண் = | 48 |
| ஆண்டினை 4 ஆல் வகுத்து வரும் ஈவு (48÷4) = | 1௨ |
| தேதி = | 30 |
| மொத்தம் | 90 |
| 1948 ம் வருசமானதால் ஜனவரிக்கு கழிக்க வேண்டிய எண் = | 1 |
| | 89 |

89 ஐ 7 ஆல் வகுக்க வரும் மீதி 5 ஆனதால் வெள்ளிக் கிழமையாகும்.

N. மார்க்கண்டன்
– மதுரை –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகிலேயே மிகுந்த எடையுள்ளவன்

"ஆஸ்ட்ரியாவின் ஆல்பர்ட் பெர்னிமச் உலகத்திலேயே மிகுதியான எடையுள்ள ஒரு ஆள் என்று உரிமை பாராட்டுவதாக" ஜப்பான் ஏர்லைன்ஸ் நியூஸ் லெட்டர் குறிப்பிடுகிறது. இவன் பெருந்தீனிக்காரனும் பெருங்குடிகாரனுமாவான். இந்தப் பெர்னிமச் என்பவன் ஒரே சமயத்தில் 80 குவளை பியரையும் இரண்டு கலனுக்கும் அதிகமான (7.6 லிற்றர்) திராட்சை மதுவையும் 14 கோழி இறைச்சியையும் விழுங்கிவிட்டான்." பிறப்பின் சமயத்தில் இவன் 13 பவுண்டுகள் (5.9 கிலோ). 15 வயதில் 400 பவுண்டுகள் (180 கிலோ). இப்பொழுது 29 வயது மனிதனாக அவன் 876 பவுண்டுகள் (397 கிலோ) எடையுள்ளவனாக இருக்கின்றான். ஜப்பானில் நடைபெற்ற ஒரு டோக்கியோ விழாக் காட்சியில் அவனுடைய உடற்பருமனை பொதுமக்களுக்காகக் காட்டுவதற்காக ஜப்பான் ஏர்லைன்ஸ் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டான். அவன் அதில் பயணம் செய்வதற்காக 747 என்ற விமானத்தின் முதல் வகுப்பு அறையிலுள்ள ஆறு இருக்கைகள் நீக்கப்பட்டு ஒரு விசேஷ இருக்கையும் பாதுகாப்புக் கச்சையும் பொருத்தப்பட்டது. அத்தோடு கூடுதலாக வலுப்படுத்தப்பட்ட தரையும் மற்றும் பெரிதுபடுத்தப்பட்ட குளியல் அறையும் கட்டப்பட்டது. பஞ்சு மெத்தைகள் கொண்ட சரக்கு வண்டியின் மூலமாக விமானத்தினுள் அவன் ஏற்றப்பட்டான்.

---

கலை விழா பற்றிய.... (31ம் பக்க தொடர்ச்சி)

விழாவும் சிறப்பாக இருந்தது. இப்படியான விழாக்கள் தமிழ் டெனிஸ் மக்களிடையே ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்த உதவியாக இருக்கும். எங்கள் கலை கலாச்சாரத்தினை வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருந்தது. இப்படிப்பட்ட விழாவிற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும். முக்கியமாக பார்வையாளராக வருபவர்கள் அமைதியாக இருந்து விழா நடாத்துபவர்களுக்கு உதவ வேண்டும். டெனிஸ் மக்கள் எங்கள் ஒற்றுமையினையும் ஒழுங்கினையும் மெச்சக் கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும். மாறாக சத்தம், கூச்சல் போடுவதால் அவர்களுக்கும் (டெனிஸ்

www.tamilarangam.net



மக்கள்) மற்றவர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கும். இதை நாங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிற்சபேசனின் மகன் விங்காவின் (5 வயது) நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. சிறு வயதிலேயே அச்சிறுவனுடைய திறமையினை மிகவும் மெச்ச வேண்டும். திருமதி. தியாகேசு அவர்கள் தொகுத்து வழங்கிய நடன நிகழ்ச்சிகள் நன்றாகவிருந்தது. நாமொலியின் நடனம் முன்னரை விடச் சிறப்பாக இருந்தது. அடுத்து "சாம்பிராட் அசோகன்" நாடகம் நன்றாக இருந்தது. சிறுவர்கள் நடித்திருந்தாலும் தமிழ் உச்சரிப்புகள் நன்றாக இருந்தது.

—திரு. S. சுந்தரராஜா, Struer.

நல்லதொரு விழா. நான் டெனிஸ் நிகழ்ச்சிகளுக்குப் போகவில்லை. ஆனால் இங்கு டெனிஸ் நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நாடகங்களுக்கு இன்னும் கூடுதலான நேரத்தினை ஒதுக்கியிருக்கலாம். சிறுவர்கள் மட்டுமல்லாமல் பெரியவர்களையும் சேர்த்து ஊரிலே மேடையேற்றும் நாடகங்களைப் போல இங்கும் மேடையேற்றினால் நன்றாகவிருக்கும்.

— திருமதி காந்திமதி சந்திரசேகரம், Struer.

திருமதி. தியாகேசு அவர்கள் நடன நிகழ்ச்சிகளை மிகவும் திறம்பட அமைத்துக் கொடுத்திருந்தார். நடன நிகழ்ச்சிகள் முன்னரைவிட மிகவும் சிறப்பாக இருந்தது. சிறுவன் விங்காவின் நிகழ்ச்சி, நாடகங்கள், டெனிஸ் நிகழ்ச்சிகள் எல்லாம் நன்றாகவிருந்தது.

—திரு M. தம்பிராஜா, Struer.

ஹொல்ஸ்ரபுரோவில் தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கம் இதுவரையில் யாரும் நடாத்தாத சிறப்பான ஒரு கலைவிழாவினை நடத்தியது போற்றத்தக்கது. நிகழ்ச்சிகள் அனைத்தும் பாராட்டத்தக்கவை. விசேடமாக திருமதி. சி. வசந்தன் தயாரித்திருந்த "சிவன் சக்தி நடனம்", 5 வயதுச் சிறுவன் விங்கா. சிற்சபேசனின் "ஒகன் இசை", திரு முத்துமணியின் "சாம்பிராட் அசோகன்" என்பன சிறப்பாக இருந்தன. நாடகங்கள் புதுக் கருத்துக்களை கூறும் வகையில் அமைந்திருந்தால் நன்றாக இருக்கும். இளைய சமுகத்தினரிடையே எமது கலைகள் மறைந்து போகாமலிருக்க இப்படியான கலைவிழாக்களை இச்சங்கம் தருமென நம்புகிறேன்.

—J.F.S. ரகுநாதன், Holstebro.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



8. முதல்முதல் உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி எப்போது, எங்கே நடைபெற்றது?

9. அந்தப் போட்டியில் இறுதியாட்டத்தில் (Final) பங்கு கொண்ட நாடுகள் எவை? வெற்றி பெற்ற நாடு எது?

10. இவ்வளவு காலமும் நடைபெற்ற உலக உதைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் கூடுதலாகப் பங்கு கொண்ட நாடு எது? கூடிய தடவைகள் வெற்றி பெற்ற நாடு எது?

11. நாலு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் உலக கிண்ணச் சுற்றுப் போட்டி இடையில் தொடர்ந்து நடைபெறாமல், இடை நிறுத்தப்பட்டது. அது எந்த ஆண்டில் இருந்து-எந்த ஆண்டுவரையிலாகும்.

12. ஸ்கன்டிநேவியா நாடுகளில் எந்த நாடு, எப்போது இறுதிப் போட்டியில் (final) பங்கு கொண்டது? அந்தப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?

* * *

உலக உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிபற்றிய இக் கேள்விகளுக்கு சரியான விடை எழுதும் முதலாவது அதிஷ்ட சாலிக்கு "கொல்ஸ்ரபுறோ ஐக்கிய இளைஞர்" விளையாட்டுக் கழகத்தால் பரிசுத்தொகை 100 குறோனர் காசுக் கட்டளையாக அனுப்பிவைக்கப்படும்.


★ முக்கிய குறிப்பு ★

இப் போட்டியில் சிறார்கள் மட்டுமின்றி வளர்ந்தவர்களும் பங்கு பற்றலாம். பதில்களை இம் மலருடன் இணைக்கப்பட்டுள்ள பத்திரத்தில் எழுதி அனுப்புதல் வேண்டும். வேறு வழியில் எழுதப்படும் பதில்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





www.tamilarangam.net





T. Rukee
13år

ELMEvej - 4. 4
7600 STRUGR


## உங்கள் கவனத்துகு

முன்பு அறிவித்தபடி தயவு செய்து உங்கள் ஓவியங்களை தெளிவாக போட்டோ பிரதி எடுக்கக்கூடிய வகையில் வரைந்து அனுப்பவும். (பென்சிலால் வரைந்து நீங்கள் அனுப்பும் ஓவியங்கள் போட்டோ கொப்பி எடுப்பதற்கு மிகவும் கஸ்டமாக உள்ளது.

. சஞ்சீவி.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி : 8



(உங்கள் கருத்து)

(அலுவலகப் பாவனைக்கு)

இங்கே வெட்டுக...

உள்ளே மடிக்கவும்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro.

Nr: 8

afs.

www.tamilarangam.net

www.tamilarangam.net

வெளியீடு.

தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கம்

"CHANCHIVE"
Postbox: 1205
7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்